வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu வீர மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 316 | பக்கங்கள் : 20


08
பார்வையற் றோரின் கண் வெள்ளை பிரம்பு


09
கிழக்கு மாகாண தமிழர்களின் கல்வி நிலை எவ்வாறுள்ளது?


10
தாக்குதலுக்குள்ளான ஹவாயின் பேர்ள் ஹாபர் இப்போது எப்படி உள்ளது?


13
'அப்பாக்களின் படை' சென்னை சம்பியனானது எப்படி?

# மீனவர்களுக்கு ஆதரவாக கடலில் இன்று போராட்டம்!

## முல்லைத்தீவு - பருத்தித்துறை வரை படகுகளில் பேரணி

வடமராட்சி, ஒக். 17

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்கவும், இழுவை படகு சட்டத்தை நடைமுறைப் படுத்தவும் கோரி இன்று ஞாயிற்றுக்கிழமை கடலில் படகு பேரணி இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு நகர துறைமுகத்தில் இருந்து காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் போராட்டம் முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை துறை முகத்தில் நிறைவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை வடமராட்சி கிழக்கு கடல்பரப்பால் படகுகள் பேரணி நகரும்போது கரையி

19

# இரு போராட்டங்களுக்கும் சகலரும் ஆதரவளியுங்கள்

## சுமந்திரன் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 17

“வடக்கு, கிழக்கில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு கோரி இன்றும், நாளையும் நடைபெறவுள்ள இரு கவனவீர்ப்பு போராட்டங்களுக்கும் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்

19

## தடை செய்யப்பட்ட

# புலம்பெயர் அமைப்புகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்தாது!

## அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

### பிரிட்டன் சென்று வந்ததும் ஜனாதிபதி தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு!

கொழும்பு, ஒக்ரோபர் 17

“உலகத் தமிழர் பேரவை போன்ற தடை செய்யப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் அராசங்கம் பேச்சு நடத்தாது. ஆனால், ஏனையவர்களுடன் பேசுவதற்கு முயற்சிக்கும்”, என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

19



# போராட்டங்களுக்கு தமிழ் அரசு ஆதரவு!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

மீனவர்கள், விவசாயிகளுக்கு ஆதரவாக இன்றும், நாளையும் நடக்கவுள்ள போராட்டங்களுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆதவளிப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்

19

# “நாட்டில் எந்தவேளையிலும் புதிய வைரஸ்கள் பரவலாம்!”

### கணிக்க முடியாத ஆபத்துகள் ஏற்படும்

கொழும்பு, ஒக்.17

கொரோனா வைரஸின் புதிய திரிபுகள் எப்போது வேண்டுமானாலும் நாட்டுக்குள் நுழையும் சாத்தியம் உள்ளது. இவ்வாறு புதிய திரிபுகள் பரவ ஆரம்பித்தால் கணிக்க

19



# காங்கேசன்துறையில் புதிய சிமெந்து ஆலை!

## 2022 இல் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 17

காங்கேசன்துறையில் அடுத் தாண்டு 2022 ஆரம்பத்தில் சிமெந்து தொழிற்சாலையை நிறுவும் பணி தொடங்கும் என்று இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் 725 ஏக்கர் நிலப்

19

## கொரோனாவுக்கு மேலும் 23 பேர் பலி!

கொழும்பு, ஒக். 17

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் நாட்டில் 23 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 ஆண்களும்,

19

# 649 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஒக். 17

நாட்டில் மேலும் 649 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இது வரை அடையாளம் காணப் பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5

19



# புதிய அரசமைப்பு நிச்சயம் வரும்!

## அமைச்சர் காமினி லொக்குகே உறுதி



கொழும்பு, ஒக். 17

**"புதிய அரசமைப்பு நிச்சயம் இயற்றப்படும். அதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இவ்வருடத்துக்குள் நிறைவு பெறும்." - இவ்வாறு அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது: -

"மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதற்கு கடந்த அரசே பொறுப்புக்கூற வேண்டும். சட்ட திருத்தத்தை மேற்கொள்ளாமல் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, உரிய ஏற்பாடுகளில் பின்னர் அடுத்த வருடம் முற்பகுதியில் தேர்தல் நடத்தப்படும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

அதேவேளை, புதிய அரசமைப்பு நிச்சயம் இயற்றப்படும். அதற்கான வரைவு நகலை தயாரிப்பதற்காக நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆளும், எதிரணி என அனைத்துத் தரப்புகளிடம் கருத்துகளை, ஆலோசனைகளைப் பெற்றது. இவ்வருடத்துக்குள் ஆரம்பகட்ட வரைவு நகல் முன்வைக்கப்படும்.

நாட்டில் பொருட்களின் விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசின் தவறால் விலை உயர்வு இடம்பெறவில்லை. உலக சந்தை நிலைவரத்துக்கு அமையவே மாற்றம் இடம்பெற்றது" - என்றார். (இ)

# நான்கு வாகனங்களுடன் கார் மோதி விபத்து; 2 பேர் மரணம்

கொழும்பு, ஒக். 17

சாரதியின் கவனயீனம் காரணமாக கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று, நான்கு வாகனங்கள் மீது மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டத்தின் மீகஹவத்த, தெல்கொட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கார் நிர்மாணப்பணியில் இருக்கும் பாலம் ஒன்றில் இருந்த பீப்பாய் ஒன்றில் மோதிய பின்னர் முன்னால் வந்த இரண்டு ஓட்டோக்களுடனும், மோட்டார் சைக்கிள் ஒன்றுடனும் மற்றும் லொறி ஒன்றுடனும் மோதியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் ஓட்டோ ஒன்றின் சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

இவ்வாறு மரணித்தவர்கள் ஹோமாகம மற்றும் கம்பஹா பிரதேசங்களைச் சேர்ந்த 31 வயது மற்றும் 38 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் காரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# அ.இ.அ.தி.மு.க...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கும் ஒரு விஷயம் இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல்களில் விஜய் ரசிகர் மன்ற அமைப்பு 100க்கும் மேற்பட்ட இடங்களைக் கைப்பற்றியுள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி, கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகள் படுதோல்வி அடைந்த நிலையில், விஜய் ரசிகர்களின் அமைப்பு வெற்றி பெற்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தளபதி விஜய் மக்கள் இயக்கம், தேர்தல் நடந்த எல்லா இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் இந்த அமைப்பு நல்ல வெற்றியைப் பெற்றுள்ளது. "169 வேட்பாளர்களை நிறுத்தினோம், 121 பேர் வெற்றி பெற்றுள்ளனர்" என்கிறார் கட்சியின் பொதுச்செயலாளர் பஸ்ஸி. என். ஆனந்த்.

அரசியலுக்கு வரும் சினிமா நட்சத்திரங்களைத் தமிழக மக்கள் எப்போதுமே நேசித்து வந்திருக்கிறார்கள். தனது தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் கட்சியை நிறுவிய இரண்டு ஆண்டுகளிலேயே நடிகர் விஜயகாந்த் 10வீத வாக்குகளை கைப்பற்றியது பலருக்கு நினைவிருக்கலாம். பொது இடங்களில் விநோதமாக நடந்துகொண்டதாலும் தனது உடல்நலக் குறைவாலும் அந்த செல்வாக்கை அவர் இழந்தார். தனது மகன் உதயநிதியை அடுத்த முதல்வராக்கும் கனவில் இருக்கும் ஸ்டாலினுக்கு தளபதி விஜயின் அரசியல் வருகை கவலை அளிக்கக் கூடும். உதயநிதியும் சினிமா நட்சத்திரம் என்றாலும், விஜயின் புகழ் பல மடங்கு அதிகமானது. இன்னும்சொல்லப் போனால், 'பாக்ஸ் ஆபீஸை'ப் பொறுத்தவரை ரஜினிகாந்துக்கு நிகராகப் பார்க்கப்படும் விஜய், அரசியல் ரீதியாக ரஜினிகாந்தை விடவும் அதிகமான மக்கள் நம்பிக்கை உடையவர். அடுத்தடுத்து வரவிருக்கும் கடுமையான அரசியல் போர்களில் ரஜினிகாந்த் முடிவு எடுக்கத் திணறுகிறார் என்பதே பலரின் கருத்து. எம்.ஜி.ஆருக்குப் பின்னான அரசியல் பூசல்களில் வீரத்துடன் போராடி அ.இ.அ.தி.மு.கவில் தனக்கான இடத்தை எவ்வாறு ஜெயலலிதா பிடித்துக்கொண்டார் என்பது பலருக்கு நினைவிருக்கலாம். தளபதி விஜய்க்கு அந்த 'கெத்து' இருப்பதாகப் பலர் நினைக்கிறார்கள்.

பல ஆண்டுகளாக தமிழக அரசியல் களத்தை கவனித்துக்கொண்டிருப்பவன் என்ற முறையில், எனக்கு இந்த நிலவரம் கவலை அளிக்கிறது. வில்லன்களைப் பந்தாடுவது, கதாநாயகியுடன் டூயட் ஆடுவது என, சினிமா கவர்ச்சியால் மட்டுமே பதவியில் ஒருவரை அமர்த்த தமிழகம் மீண்டும் தயாராகிவிட்டதா? மக்களின் அடித்தட்டு அன்றாடப் பிரச்னைகளை அறிந்தவராகவும் கவலைப்படுபவராகவும் அவர் இருக்க வேண்டாமா?

# எஸ்.ரி.எவ்வின் சுற்றிவளைப்பில் 8 பேர் கைது!

கொழும்பு, ஒக். 18

நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில், பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மூன்று மதுபான சுற்றிவளைப்புகளில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 242.25 லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் 568 லீற்றர் கோடா, ஒரு ஓட்டோ, ஒரு செப்புத் தகடு, 5 இரும்பு பீப்பாய் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கதிர்காமம் திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரன்மினிதென்ன பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கியுடன் திஸ்ஸமஹாராமை பிரதேசத்தை சேர்ந்த 37 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 6 கிராம் 75 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 34 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மனன்துரை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரமின்றி களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த மணலை டிப்பர் ரக வாகனத்தில் ஏற்றிக்கொண்டிருந்த இருவரை டிப்பர் ரக வாகனத்துடன் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்து தங்கொட்டுவ பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தங்கொட்டுவ, லுனுவில ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 23, 27 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சுமார் ஒன்றறை கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வத்தளைப் பிரதேசத்தை சேர்ந்த 33 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

### கல்வி TV CHANNEL-1 — 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2 — 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
17.10.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## புதிய அரசியல் சாசனத்தின் இலக்கு?

புதிய அரசியலமைப்புக்கான உத்தேச வரைவை இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளதாக நிதியமைச்சர் அறிவித்திருக்கின்றார். அண்மையில் புதிய அரசியல் சாசனத்தை அடுத்த ஆண்டு கொண்டுவரவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார். ஒரு விடயத்தை பலரும் கவனிக்காமல் இருந்திருக்கலாம். அதாவது, இராணுவ முகாம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில்தான் ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தலின்போது, புதிய அரசியல் சாசனம் ஒன்றை கொண்டுவரப் போவதாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அவர் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாகவே தற்போது புதிய அரசியல் சாசனத்திற்கான சட்ட வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளனர்.

ரணில் - மைத்திரி அரசாங்கம் புதிய அரசியல் சாசனம் ஒன்றை கொண்டுவரப் போவதாக கூறியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனை நம்பி ஐந்து வருடங்களை செலவழித்தது. ஆனால், இறுதியில் எதுவும் நடக்கவில்லை. தற்போது இந்த அரசாங்கமும் புதிய அரசியல் சாசன கதையொன்றை எழுத முயற்சிக்கின்றது. இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற 1978 - அரசியல் யாப்பு, வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்டிருக்கும், தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு யாப்பு. இந்த நிலையில் புதிய அரசியல் யாப்பு எந்த வகையிலும் ஒற்றையாட்சியை இல்லாதொழித்து, இலங்கைத் தீவை ஒரு சமஷ்டியாக பிரகடனம் செய்யும் யாப்பாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. அப்படியாயின் புதிய அரசியல் சாசனம் எதற்காக? யாருக்காக?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை வெளிப்படையாகவே ஒரு பௌத்த - சிங்கள தலைவனாகப் பிரகடனம் செய்திருக்கின்றார். இலங்கையின் ஜனாதிபதிகள் எவருமே இப்படியானதொரு பிரகடனத்தை செய்ததில்லை. அவர்களும் சிங்கள - பௌத்த தேசியவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்தவர்கள்தான். ஆனாலும், ஒருபோதுமே வெளிப்படையாக தங்களை அவ்வாறு காண்பித்துக் கொண்டதில்லை.

இந்த பின்புலத்தில், இந்த அரசாங்கம் எவ்வாறானதோர் அரசியல் யாப்பை கொண்டுவரும்? உண்மையில் இது ஓர் அச்சமூட்டும் கேள்வி. தற்போது நடைமுறையில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சடத்தை முழுமையாக அமுல்படுத்துவதை விரும்பாத ஓர் அரசாங்கம் எவ்வாறு, 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை விடவும் சிறப்பான விடயங்களை உள்ளடக்கும், புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவரும்? 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்களை விடவும் சிறப்பான ஏற்பாடுகளை வழங்கினால் அதனை தமிழர்கள் வரவேற்கலாம் ஆனால், அது நடக்கும் ஒன்றல்ல. ஏனெனில், தமிழ் மக்களை சமத்துவமாகவும் கௌரவமாகவும் நடத்தக்கூடிய ஓர் அரசியல் யாப்பை கொண்டுவரும் எண்ணமுள்ள அரசாங்கம், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, தமிழ் மக்களின் நன்மதிப்பை வெற்றிகொள்ள முயற்சித்திருக்கும் ஆனால், இதுவரையில் அரசாங்கம் தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற வேண்டுமென்னும் நோக்கில் எதனையும் செய்யவில்லை.

இந்த நிலையில், புதிய அரசியல் யாப்பின் இலக்கு என்னவாக இருக்க முடியும்? இருக்கின்ற அதிகாரங்களையே வழங்காத அரசாங்கம், புதிதாக எதனையும் செய்யப் போவதில்லை. அவ்வாறு செய்யுமென்று எண்ணுவது தர்க்க ரீதியில் தவறானது. இந்த அடிப்படையில் நோக்கினால் 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்கும் ஒரேயொரு நோக்கம்தான் புதிய அரசியல் யாப்பின் இலக்காக இருக்க முடியும். ஏனெனில், அதுதான் சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புக்களுக்கு எரிச்சலூட்டும் ஓர் ஏற்பாடாக இருக்கின்றது. அதனை இல்லாதொழிக்க வேண்டும் என்பதே அவர்களின் நீண்ட கால அவா. இதன்மூலம் இலங்கை தமிழர் பிரச்னையில் இந்தியாவின் தலையீட்டை இல்லாதொழிக்கலாம் என்பதே அவர்கள் போடும் கணக்கு.

இதனை தமிழ்த் தலைவர்கள் என்போர் எந்தளவு விளங்கிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு விளங்கிக் கொண்டிருந்தால், புதிய அரசியல் சாசனத்திற்கான ஆலோசனைகளை வழங்கியிருப்பார்களா? அதேவேளை தமிழ் மக்களுக்கு எதிரான யாப்பு ஒன்றை கொண்டுவரும் போது, தமிழ் மக்கள் அதனை நிராகரிக்க வேண்டும் என்றும் பிரசாரங்களை மேற்கொள்ளலாம். ஆனால், தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட யாப்புக்களின் ஊடாகத்தானே, கடந்த ஐம்பது வருடங்களாக தமிழ் மக்கள் ஆளப்பட்டிருக்கின்றனர்! மீண்டும் அப்படியான தமிழர் விரோத-யாப்பு ஒன்றினால், தமிழ் மக்களை ஆள எண்ணினால், தமிழர்களால் என்ன செய்ய முடியும்? வழமைபோல் அறிக்கைகளை விடுவதைத் தவிர!

### ஆப்கானில் தவறான ட்ரோன் தாக்குதல்:

# இறந்தோர் குடும்பங்களுக்கு அமெரிக்காவின் நிதி உதவி!

கடந்த ஓகஸ்ட் மாதம் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் நடத்திய ட்ரோன் தாக்குதலில், ஒரு மனிதாபிமான சேவைப் பணியாளர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் உறவினர்களுக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது அமெரிக்கா.

சேவைப் பணியாளர் மற்றும் அவரது ஒன்பது குடும்ப உறுப்பினர்கள் (அதில் ஏழு பேர் குழந்தைகள்) என மொத்தம் 10 பேர் அமெரிக்கா நடத்திய ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

அக்குடும்பத்தில் உயிர் பிழைத்திருப்பவர் களை, அமெரிக்காவில் குடியேற்ற தேவையான நடவடிக்கை களை எடுத்து வருவதாக பென்டகன் கூறியுள்ளது. அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுவதற்கு, சில தினங்களுக்கு முன்பு இந்த ட்ரோன் தாக்குதலை நடத்தியது குறிப் பிடத்தக்கது.



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் திடீரென அதிகாரத்துக்கு வந்த பின், மக்களை வெளி யேற்றும் பணிகள் அவசரகதியில் நடந்து வந்தன. அப்போது காபூல் விமான நிலையத் துக்கு அருகில் ஐ எஸ் - கே என்கிற கடும் போக்குவாதக் குழு ஒன்று தாக்குதல் நடத்தி யது. அதையடுத்து அமெரிக்கப் படையினர் வெளியேறும் முன்னர் மீண்டும் ஒரு தாக்கு தல் நடத்தப்படலாம் என்று கூறியிருந்தார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்.

அந்த இரண்டாவது தாக்குதலை தடுக்கு முனைப்பில், இந்த உதவிப் பணியாளரை தீவிரவாதி என்று தவறாக நினைத்து தாக்குதல் நடத்தியது அமெரிக்கா.

ஓகஸ்ட் 29 அன்று அமெரிக்க உளவு அமைப்பு, அந்த உதவிப் பணியாளரின் காரை எட்டு மணி நேரங்களாக பின் தொடர்ந்தது. அந்த உதவியாளருக்கும் ஐ. எஸ். கே அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்பட்டது என அமெரிக்காவின் மத்திய கமாண்ட் ஜெனரல் கென்னத் மெக்கன்ஸி கடந்த மாதம் கூறினார்.

புலன் விசாரணையில் அவரது கார், ஐ. எஸ்.கே அமைப்பினருடன் தொடர்புடைய வளா கம் ஒன்றில் காணப்பட்டதாக தெரிய வந்தது. அந்த காரின் போக்குவரத்து நடவடிக்கைகள், மற்ற புலனாய்வு அமைப்புகளின் விவரங்களோடு ஒத்துப்போயின.

ஒருகட்டத்தில், அக்காரில் வெடி மருந்துகள் ஏற்றப்படுவதாக ட்ரோன் கமராவில் தோன்றியது. ஆனால் உண்மையில் அவ்வாகனத்தில் தண்ணீர் குடுவைகளே ஏற்றப்பட்டன. அந்த தாக்குதல் மிகவும் சோகமான தவறு என ஜெனரல் மெக்கன்ஸி விவரித்தார்.

சமைரி அஹ்மதி என்கிற அந்த சேவைப் பணியாளர், காபூல் விமான நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில், தன் வீட்டின் அருகே தன் வண்டியை செலுத்திய போது, அவர் மீது ட்ரோன் தாக்குதல் நடந்தது.

தாக்குதல் நடத்தப்பட்ட போது, கார் இரண்டாவது முறை வெடித்ததற்கு, அதிலிருந்து வெடிபொருட்களே காரணமென்று அமெரிக்கா தொடக்கத்தில் கூறியது. ஆனால், விசாரணையில் அது, அவரது வீட்டுக்கு அருகில் இருந்த ப்ரொபேன் எரிபொருள் தாங்கி வெடித்திருக்கலாம் என தெரிய வந்தது.

அத்தாக்குதலில் அஹ்மத் நாசர் என்பவரும் கொல்லப்பட்டார். அவர் அமெரிக்க படைகளுக்கு மொழிபெயர்ப்பாளராக பணியாற்றியவர்.

இறந்தவர்களின் உறவினர்களுக்கு அமெரிக்காவின் பாதுகாப்பு - கொள்கை செயலர் கொலின் கால், ஆப்கானிஸ்தானில் செயல்பட்டு வரும் உதவிக் குழுவான ஊட்டச்சத்து மற்றும் கல்வி இன்ரர்நஷனல் என்கிற அமைப்பின் நிறுவனர் ஸ்டீவன் க்வானிடம் நஷ்ட ஈட்டுத் தொகையை கடந்த வியாழக்கிழமை வழங்கினார் என பென்டகனின் செய்தியறிக்கை கூறியுள்ளது.

ட்ரோன் தாக்குதலில் இறந்த அஹ்மதி மற்றும் அவரது குடும்பத்தினர் அப்பாவிகள், அவர்கள் மீது பழி பாவம் எதுவும் இல்லை, அவர்களுக்கும் ஐ.எஸ்.கே. அமைப்பினருக்கும் எந்தவித தொடர்போ, அமெரிக்க படைகளுக்கு அவர்களால் எந்த வித ஆபத்துகளோ இருக்கவில்லை என்று கூறினார் கொலின் கால்.

அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலர் லாய்ட் ஆஸ்டின் இந்த ட்ரோன் தாக்குதலுக்கு மன்னிப்பு கோரியது போதாது என அஹ்மதியின் 22 வயது சகோதரர் ஃபர்ஷத் ஹைதரி கூறினார்

"அவர்கள் இங்கே வந்து எங்கள் முகத்தை நேருக்கு நேர் பார்த்து மன்னிப்பு கூற வேண்டும்" என காபூலிலிருந்து ஏ.எவ்.பி. செய்தித் தளத்திடம் கூறினார் அவர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



## நூல் நயம்:


# முருகபூபதியின் பாட்டி சொன்ன கதைகள்

**ஹரிஜன் பசுபதிதாசன் - மெல்பர்ன்**

பாட்டி என்ற சொல்லைக் கேட்டாலே, சிறு வயதில் எம்மை ஆசை ஆசையாய் மடியில் அமர வைத்து, செல்லமாக நமக்கு பாட்டி சொன்ன கதைகள்தான் எம் கண்கள் முன் தோன்றும்.

அவ்வெழில் வாய்ந்த நினைவுகளை மீண்டும் பெரியவர்களுக்குள் தூண்டுவதுடன், இவ்வாறான கதைகள் மூலம், எம் பாட்டி நமக்கு புகட்டிய பல முக்கியமான வாழ்க்கைப் பாடங்கள், அடுத்த தலைமுறை பாலகர்களுக்கும் சேர வேண்டும் என்ற நோக்கத்தில் எழுத்தாளர் முருகபூபதி எழுதிய சிறுவர் இலக்கியப் புத்தகம் தான் “பாட்டி சொன்ன கதைகள்.”

இதனை இலங்கையில் இலக்கியன் வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது. அத்துடன் இச்சிறுவர் இலக்கியத்திற்கு இலங்கை கல்வி அமைச்சின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.




ஏற்கனவே 1997ஆம் ஆண்டளவில் இலங்கையில் மல்லிகைப்பந்தல் வெளியீடாக வந்திருக்கும் முருகபூபதியின் பாட்டி சொன்ன கதைகள் புத்தகத்தில் 12 கதைகள் இடம் பெற்றிருந்தன.

குறிப்பிட்ட புத்தகம் தமிழ்நாட்டில் குமரன் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டபோது, தமிழக ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர் இலக்கிய வரிசையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட அந்த புத்தகத்திலிருந்து சில கதைகளை எடுத்து, அவற்றுக்கு பொருத்தமான ஓவியங்களுடன் சிறுவர்களின் கருத்தையும் கண்ணையும் கவரும் விதமாக இலக்கியன் வெளியீட்டகம் இந்தப்புத்தகத்தை வரவாக்கியுள்ளது.

பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாளருமான முருகபூபதியினால் எழுதப்பட்ட இக்கதைகளுக்கு ஓவியர் ஆர்.கௌசிகன் படங்கள் வரைந்துள்ளார். இப்புத்தகம், வளரும் பிள்ளைகளின் நிகழ் காலத்திற்கும், எதிர் காலத்திற்கும் உபயோகமான கருத்துக்களை கதையின் ஊடாக சித்தரிக்கின்றது.

“தனித்துவம்” என்ற கதையில், ஒரு பசுவும் நாயும் எதிரும் புதிருமாய் தங்களிடையே, யார் சிறந்தவன் என்று வாக்குவாதம் செய்கின்றன. பசு “நான் மிகவும் புனிதமான பிராணி, என்னை கோமாதா என்று அழைப்பார்கள் ” எனக் கூறவும், நாய் அதற்கு விட்டுக்கொடுக்காமல் தான் “நன்றியுள்ள மிருகம் எனப் பெயர் பெற்றவன்” என்று சொல்லி சுய தம்பட்டம் அடிப்பதையும் காண நகைச்சுவையாக இருந்தது. ஆனால், இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு கோழியின் வசனம் மூலம், முருகபூபதி வாசகரை குறிப்பாக சிறுவர்களை சிந்திக்கவைக்கிறார்.

“யாரும் யாராகவும் மாறிவிட முடியாது. அவரவர் தத்தம் தனித்துவம் பேணுவதுதான் பெருமை. நீயா நானா உயர்வு என்ற வாதத்தில் எந்த நன்மையும் விளையாது. பகைமைதான் வளரும்.”

ஒற்றை வசனத்தில் பிள்ளைகளுக்கான ஒரு வாழ்வின் தத்துவத்தையே ஆசிரியர் இதில் உள்ளடக்கியுள்ளார் என்பது என்னை லயிக்க வைத்தது!

அடுத்து, பூனையால் வரப் போகும் ஆபத்தில் இருந்து தப்பிப்பதற்காக, சுரண்டிக் கொழுக்கும் ஒரு பெருச்சாலியிடம் மாட்டிக்கொண்ட எலிகளின் கதைதான் என் மனதை கவர்ந்தது.

எலிகளுக்கு வந்திருக்கும் இன்னலை கடப்பதற்காக, ஒரு சிறிய சுண்டெலி தன் திட்டத்தை முன்வைக்கின்றது. ஆனால், அந்த வளர்ந்த எலிகள், அதனது குறைந்த வயதையும் சிறிய உருவத்தையும் காரணமாக காண்பித்து, எவ்வளவுதான் அதை இகழ்ச்சியாக புறக்கணித்தாலும், “சிறு துரும்பும் பல் குத்த உதவும்” என்று கூறி, அனைவரையும் தனது ஆலோசனையை கேட்க வைத்து வெற்றி பெறுகிறது. அந்தச் சுண்டெலியின் கருத்தை சிறு பிள்ளைகள் மட்டுமல்ல, முழுச்சமுதாயமே உணர வேண்டியவொன்று.

“நாம் ஒற்றுமையாகச் செயல் பட்டால் பூனையை அழிக்கமுடியும். முதலில் எம்மை நாம் உணர்வோம். எமது பலத்தை அறிவோம். நமது எதிரியை நாம் தான் அழிக்க வேண்டும்.”

ஒற்றுமையின் பலத்தை கூறுவதுடன், பாரதியார் எவ்வாறு “ தழல் வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ” எனக் கூறியதைப் போலவே, முருகபூபதி அவர்களும் சிறுபிள்ளைகள் தத்தம் வயதை எண்ணி தயங்காமல், தங்கள் கருத்தை துணிச்சலுடன் முன்வைக்கவேண்டும் என்ற உத்வேகத்தை அளிப்பது நிச்சயமாக சிலாகிக்கக்கூடயது!

எனவே, அனைத்து கதைகளையும் ஆராய முடியாமல் போனாலும், தொடக்கம் முதல் அந்தம் வரை என் ஆர்வத்தை சுவாரசியத்துடன் ஈர்த்தது இப்புத்தகம்.

தனித்துவம், துவேஷமின்மை, பலம், தகுதி அறிதல், கடின உழைப்பின் நிரந்தரப் பரிசு போன்ற பூர்வாங்கமான தத்துவங்களை, பிள்ளைகள் கவரும்வகையிலும் அக்கதைகளுக்கு உயிர் கொடுக்கும் யதார்த்தமான ஓவியங்களுடனும் இணைந்த இப்புத்தகம் சிறுவர்களின் வாசிப்பு அனுபவத்திற்கு சாலச்சிறந்த படைப்பு. ■

---

**ஒக்.17 ஞாயிற்றுக்கிழமை**
**பிலவ வருடம் - புரட்டாதி 31**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | துவாதசி |



## இன்றைய ராசிபலன்

**17.10.2021**

**மேடம்**
இலக்கை நோக்கி முன்பைவிட வேகமாக முன்னேறுவீர்கள். உங்களால் பயன் அடைந்தவர்கள் தக்க சமயத்தில் ஆதரிப்பர். பழைய நண்பர்களின் வருகையால் உற்சாகம் அடைவீர்கள்.

**இடபம்**
முயற்சியால் முன்னேறுவீர்கள். பய உணர்வு நீங்கும். எதிர்நோக்கியிருக்கும் சவால்களை முடித்து மகிழ்வீர்கள். முன்பு கை நழுவிப்போன வெற்றியை அடைவீர்கள்.

**மிதுனம்**
மற்றவர் பிரச்னைகள் தீர உதவியாக இருப்பீர்கள். முன்பு இருந்த குற்ற உணர்வு நீங்கும்படியாக நடப்பீர்கள். பிறரின் விவகாரங்களில் தலையிடாமல் இருந்தால் ஜெயிப்பீர்கள்.

**கடகம்**
பேச்சினால் பிரச்னை வராமல் உங்களை காத்துக் கொள்ளுங்கள். மற்றவர் மனம் நோகும் படியான பேச்சோ, செயலோ வேண்டாம். புதிய சாதனையால் மற்றவர்களுக்கு வியப்பூட்டுவீர்கள்.

**சிம்மம்**
மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான சம்பவங்கள் நடக்கும். மனு செய்திருந்த கடன் தொகை சுலபமாகக் கிடைக்கும். வாக்கு வன்மையால் ஜெயித்து நன்மை ஒன்றை அடைவீர்கள்.

**கன்னி**
தைரியம் அதிகரிக்கும். புத்தியில் தெளிவு உண்டாகும். கூடுதலாக உழைத்து மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். நண்பர்களால் நிம்மதி கிடைக்கும். பயம் நீங்கும்.

**துலாம்**
நண்பர்கள் இடையே வெளி நபர்களால் ஏற்பட்ட குழப்பம் தீரும். சுபநிகழ்வு தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடக்கூடும். இளைஞர்கள் கொடுகப்பட்ட வேலையை சிறப்பாக முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
தேவையற்ற கோபங்கள் குறையும். வெற்றி வாய்ப்பு கூடும். அலுவலகத்தில் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். உழைப்பு கூடும். பொது விவகாரத்தில் ஈடுபட்டு புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**தனுசு**
சாதுர்யமாக செயல்பட்டு சிரமங்களில் இருந்து மீளுவீர்கள். தவறானவர்களின் ஆலோசனைகளை கேட்பதைத் தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட பயணத்தில் திருப்பம் ஏற்படலாம்.

**மகரம்**
சிறு தவறால் முன்னேற்றம் தாமதமாவதற்கு வாய்ப்புள்ளது. புதியவர்கள் நட்பு பற்றி சற்று கவனமாக இருப்பது நல்லது. பெண்கள் குழந்தைகள் நலனில் அக்கறை கொள்வார்கள்.

**கும்பம்**
கவனத்துடன் செயல்பட்டால் சுலபமாக வெற்றி பெறலாம். கலவையான பலன்கள் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உதவும். தடைகளையும், தாமதங்களையும் விடாமுயற்சியால் வெல்வீர்கள்.

**மீனம்**
புதிய வாகனம் வாங்குவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பற்றி இருந்து வந்த கவலைகள் நீங்கும். சிறு பயணம் வெற்றி தரும். புதிய துறையில் ஆர்வம் வரும்.

# தாயின் மூன்றாவது கணவரால் இரு சிறுமிகள் துஷ்பிரயோகம்!

## முல்லைத்தீவில் அதிர்ச்சி சம்பவம் உடந்தையாக இருந்த தாயும் கைது

முல்லைத்தீவு, ஒக். 17

**தாயின் மூன்றாவது கணவரால் இரு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கணவரின் தொடர்ச்சியான இந்தக் கொடூர சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த தாயையும் முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.**

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அந்தப் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் மூன்றாவது முறையாக திருமணம் செய்துள்ளார். அவரின் கணவர், முன்னதாக இரு கணவர்கள் மூலம் அந்தப் பெண்ணுக்கு பிறந்த பதின்ம வயது இரு சிறுமிகளை தொடர்ச்சியாக துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்த கிராமத்தவர்கள் சிறுவர் துஷ்பிரயோக தடுப்பு பிரிவுக்கு முறைப்பாடு செய்தனர். இதையடுத்து, அந்தப் பெண்ணையும், அவரின் தற்போதைய கணவரையும் முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்தனர்.

மூன்றாவது கணவர் தனது, இரு மகள்களையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தயாருக்கு முன்னரே தெரிந்திருந்தது. ஆனால், அது பற்றி அவர் எந்த எதிர்ப்பையும் அல்லது எதிர் நடவடிக்கையையும் செய்யவில்லை என்று தெரிய வந்தது. இதையடுத்து சிறுமிகளின் தாயரை குற்றத்துக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுமிகள் இருவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேகநபரான பெண்ணின் மூன்றாவது கணவரையும், அவருக்கு உடந்தையாக இருந்த பெண்ணையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)



# கணபதி அறக்கட்டளை ஊடாக 15 குடும்பங்களுக்கு உலருணவு

வடமராட்சி, ஒக். 17

கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்திற்கு உட்பட்ட 15 குடும்பங்களுக்கு கணபதி அறக்கட்டளை நிறுவனத்தின் ஊடாக உலருணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கனடாவில் வசிக்கும் தும்பளை பகுதியைச் சேர்ந்த உறவுகள் மூலம்15 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(ஐ -02)

# ஸ்கந்தபுரம் கரும்புதோட்ட காணி பொது அமைப்புகளிடம் கையளிப்பு!

கிளிநொச்சி, ஒக். 17

நீண்ட காலமாக தனிப்பட்ட சிலரின் அத்துமீறிய ஆக்கிரமிப்பின் கீழிருந்துவந்த ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக் காணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் தற்காலிகமாக பிரதேச பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கூடவே, நீண்டகால அடிப்படையில் சீனித் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கும் நோக்குடன் இந்தக் காணியில் கரும்புச் செய்கையும் பிரதேச அமைப்புக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலாளர் பாலசிங்கம் ஜெயகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ. றுஷாங்கன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் இராசலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்றனர்.

ஸ்கந்தபுரம், அக்கராயன், கண்ணகைபுரம், கோணாவில், ஆனைவிழுந்தான் பிரதேசங்களைச் சேர்ந்த 12 பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து ஒழுங்குசெய்த இந்த



நிகழ்வில், கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் கருணா, நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்துகொண்டு, 196 ஏக்கர் அளவான கரும்புத் தோட்டக் காணியில் நெற் செய்கை மேற்கொள்ளக்கூடிய 147 ஏக்கர் காணி பொது அமைப்புக்களுக்கு திருவுளச் சீட்டு மூலம் பிரித்து வழங்கப்பட்டது.

அந்தந்த அமைப்புக்கள் தமது அமைப்பின் உறுப்பினர்களில் காணிகளற்றவர்களுக்கு காணியை உரிய முறையில் பிரித்து வழங்கி இம்முறை கால போகத்துக்கு மாத்திரம் நெற் செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏக காலத்தில், சுமார் 10 ஏக்கர் அளவான காணியில் எதிர்காலத்தில் சீனித் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கும் நோக்குடன் கிளிநொச்சி கரும்பு ஆராய்ச்சி நிறுவன பொறுப்பதிகாரி சிவபாலனின் வழிகாட்டலில் சம்பிரதாயபூர்வமாக கரும்புச் செய்கையையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் கோ. றுஷாங்கன் ஆரம்பித்துவைத்தார். (ஐ)



# யாழ். நகரில் போதைப்பொருள் விற்பனை செய்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் நகரத்தில் கடந்த 3 நாட்களாக மேற்கொண்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 10 கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இதில், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்து ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டுவந்துள்ளனர். ஹெப்பிட்டிகொலாவையை சேர்ந்த 58 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து 2 கிராம் 500 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டன.

குருநகர் பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த 38 வயதுடைய நபர் பொலிஸாரிடம் சிக்கினார். அவரிடம் இருந்து இருந்து 2 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சென்று போதைப் பொருள் வாங்கி வந்த பொம்மைவெளியை சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் தொடர்பாக தகவல் கிடைத்து அவரின் வீட்டை சோதனையிட்டபோது அவரிடம் இருந்து 5 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

கைதான மூவரையும் 5 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க யாழ். நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

(ஐ)

# பட்டப்பகலில் வீடுடைத்து நகைகள், பணம் திருட்டு!

வவுனியா, ஒக். 17

பட்டப்பகலில் வீடுடைத்து 4 பவுண் நகைகளும், 70 ஆயிரம் ரூபாய் பணமும் திருடப்பட்டதாக வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

களவு கொடுத்த வீட்டார் நேற்று முன்தினம் காலை உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் பங்கேற்பதற்காக காலை 8 மணிக்கு சென்றிருந்தனர். மாலை 6 மணியளவில் அவர்கள் வீட்டுக்கு திரும்பியபோது, முற்றத்தில் அலுமாரியின் பெட்டகங்கள் சிதறிக் கிடப்பதைக் கண்டனர்.

வீட்டுகுள் சென்று பார்த்த போது வீட்டின் பின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. அத்துடன், வீட்டிலிருந்த 4 பவுண் பெறுமதியான நகைகளும், 70 ஆயிரம் ரூபாய் பணமும் திருடப்பட்டமை தெரிய வந்தது. இதையடுத்து, அவர்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# பால் வாங்க நீண்ட வரிசை

வடமராட்சி, ஒக். 16

பசு பாலை கொள்வனவு செய்வதற்காக வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி பகுதி மக்கள் நீண்ட வரிசையில் - நெடு நேரம் காத்திருந்து கொள்வனவு செய்கின்றனர்.

அண்மைய நாட்களாக பால் மாவுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், அவற்றின் விலையும் அதிகரித்துள்ளன. இதனால், மக்கள் பசுப் பாலை அதிகளவில் கொள்வனவு செய்கின்றனர்.

இந்நிலையில், உடுப்பிட்டி சந்தியில் அமைந்துள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க விற்பனை நிலையத்தில் பாலை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்டவரிசையில் நெடுநேரம் காத்திருக்கின்றனர். (ஐ)

# ஒரு லீற்றர் பாலுக்கு ரூ. 7 கூடுதலாக வழங்க முடிவு

கொழும்பு, ஒக். 17

உள்ளூர் பால் உற்பத்தியாளர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க மில்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, லீற்றர் ஒன்றுக்கு, மேலதிகமாக 7 ரூபாயை வழங்க தீர்மானித்துள்ளது.

நவம்பர் முதலாம் திகதி முதல் இந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வரவுள்ளதாக மில்கோ நிறுவனத்தின் தலைவர் லசந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

உள்ளூர் பால் மா உற்பத்திகளுக்கான விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர், பெண்கள் மீதான துஷ்பிரயோக வழக்குகளுக்கு இரு மாதங்களில் தீர்ப்பு!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஒக். 17

**பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளின் விசாரணைகளை அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்குள் முடிவடையும் வகையில் சட்ட அமைப்பு திருத்தப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்படியான வழக்குகள் சில சமயங்களில் 10 வருடங்கள்கூட இழுக்கப்படுகிறன. இப்படி நீண்டகாலம் இழுபடுவதால் பாதிக்கப்பட்டவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குற்றம் சாட்டப்பட்ட தரப்பினர் இந்த மாதிரியான குற்றங்களை தொடர்ந்து செய்வார்கள்.

நாட்டில் மிரட்டி பணம் பறிப்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து செல்கிறது. பொதுமக்களை தொந்தரவு செய்தால் இதுபோன்ற குற்றவாளிகளை அடையாளம் காணவும், கண்டுபிடிக்கவும், கைது செய்யவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பரிணாம வளர்ச்சியடைந்த சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களை துஷ்பிரயோகம் செய்யும் நபர்கள் பதிவாகக்கூடாது. துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகள் பிற்காலத்தில் வாழ்க்கையில் பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியுளள்து. ஏனெனில், சட்ட நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)



# ரஷ்யாவின் இரு நீர்மூழ்கிகள் நேற்று கொழும்புக்கு வந்தன!

கொழும்பு, ஒக். 17

ரஷ்ய கடற்படைக்கு சொந்தமான இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்த இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களும் போர் கப்பல்கள் என கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள இரண்டு கப்பல்களையும் கடற்படைத் தளபதி பார்வையிடவுள்ளாரென அவர் கூறினார். (ஐ)

# போரில் உயிர்நீத்த மாணவர்கள் நினைவாக இரத்ததான முகாம்!

கிளிநொச்சி, ஒக். 17

சிறுவர் தினத்தை முன்னிட்டு போரின் போது உயிரிழந்த மாணவர்கள் நினைவாக கிளிநொச்சி மகா வித்தியாலய 2015 உயர்தர மாணவர் அணியினரின் ஒழுங்குபடுத்தலில் குருதிக் கொடை முகாம் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இந்த இரத்ததான முகாம் 8ஆவது வருடமாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ். கருணதீபா மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரிய - மாணவர் சமூகத்தினர் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# பசுமை விவசாய மேம்பாட்டுக்கு ஜனாதிபதி செயலணி நியமனம்!

கொழும்பு, ஒக். 17

பசுமை விவசாயத்தை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

14 பேர் கொண்ட இந்த செயலணியின் தலைவராக விஜித் வெலிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி. பி. ஜெயசுந்தர கையொப்பமிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில், வேளாண் பொருளாதாரத்தை வளர்க்கவும், உள்ளூர் மற்றும் சர்வதேச நுகர்வோருக்கு நச்சு இல்லாத விவசாயப் பொருட்களை பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கவும் பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆரோக்கியமான பசுமை வேளாண்மையை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது, இதன் மூலம் மண் மற்றும் நீரில் சேர்க்கப்படும் இரசாயன கழிவுப்பொருட்களை குறைக்கிறது. 14 பேர் கொண்ட பணிக்குழு, பசுமை வேளாண்மையின் நிலையான பராமரிப்பு, பல்வேறு பயிர்களுக்குத் தேவையான கரிம உரங்களை அடையாளம் காணுதல் மற்றும் உள்நாட்டில் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை உருவாக்குதல் போன்ற முறையான திட்டத்தை உருவாக்கும்.

உள்ளூர் உற்பத்தி மூலம் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை தரநிலை நிறுவனத்தின் ஒப்புதலின் பேரில் உரம் இறக்குமதி செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல் மற்றும் கண்காணிக்கும் பணியையும் மேற்கொள்ளும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 75 ஆயிரம் தொன் சீனி கையிருப்பிலுள்ளது!

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 17

நாட்டில் போதுமான அளவு சீனி உள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

சீனிக்கான தட்டுப்பாடு தொடர்பில் அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 75,000 தொன் சீனி கையிருப்பில் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண கூறினார்.

மாதமொன்றுக்கு 45,000 தொன் சீனி மாத்திரமே நுகர்விற்கு தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிர்ணய விலையை விட அதிக விலைக்கு சீனி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். 130 ரூபாய்க்கும் அதிக விலையில் ஒரு கிலோ சீனி விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும், பொதி செய்யப்படாத ஒரு கிலோவிற்கான அதிகபட்ச விலை 122 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிவப்பு சீனி ஒரு கிலோ 125 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிர்ணய விலைக்கு அதிக விலையில் சீனி விற்பனை செய்வோரை கைது செய்வதற்கு நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண குறிப்பிட்டார்.

# இரண்டு பொலிஸார்மீது கத்தி குத்து தாக்குதல்!



கொழும்பு, ஒக். 17

கொழும்பு - முகத்துவாரம் பொலிஸ் பிரிவில் இரவு நேர கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை கத்தியால் குத்திய சந்தேக நபர் கைது செய்யப்பட்டாரென பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை இரவு முகத்துவாரம் பொலிஸ் பிரிவில் எலிஹவுஸ்பார்க் பகுதியில் இரவுநேர கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சந்தேகத்திற்கிடமாக நடமாடியவரை சோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது அந்த நபர் இரு பொலிஸார்மீதும் கத்திக் குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். காயமடைந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸாரை தாக்கிய சந்தேகநபர் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர் என்று மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர் இதற்கு முன்னரும் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விழைவித்தமை , பொலிஸாரை தாக்கியமை, அவர்களை படுகாயமடையச் செய்தமை, கைது செய்த போது தப்பிச் செல்ல முயற்சித்தமை என அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ஐயப்பன் பக்தர்கள் இந்தியா செல்ல நவம்பர் முதல் வீசா வழங்க ஏற்பாடு

கொழும்பு, ஒக். 17

இலங்கையிலிருந்து செல்லும் ஐயப்பன் பக்தர்களுக்கு நவம்பர் மாதம் முதல் வீசா வழங்குவற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஐயப்பன் யாத்திரை மேற்கொள்ளவதில் உள்ள சவால்கள் குறித்து இந்து கலாசார திணைக்களத்தில் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கையில் இருந்து இந்தியா செல்வதற்காக வீசா வழங்கும் நடைமுறை தற்போது நிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் வீசா வழங்குவதற்கான விசேட நடவடிக்கை எடுக்குமாறு செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.


இது தொடர்பாக இந்திய உதவி உயர்ஸ்தானிகரை தொடர்பு கொண்டு, வீசா வழங்குவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார். கோரிக்கையை ஏற்று நவம்பர் மாதம் முதல் வீசா வழங்குவற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்க்பபட்டது.

மேலும், கேரள மாநிலத்திற்கு விமான சேவைகள் இயங்காத சூழ்நிலையில் சபரிமலை செல்வதற்கு தமிழகம் ஊடாக வெகுதூரம் சாலைவழியில் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் மீண்டும் விமான சேவை ஆரம்பிப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், திருவனந்தபுரம், கொச்சின் விமான சேவைகளை ஆரம்பிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று செந்தில் தொண்டமானுக்கு விமானத்துறை அமைச்சர் உறுதியளித்தார் என்று அவரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




# அ.இ.அ.தி.மு.க பொன்விழா: ஆலமரத்திலிருந்து 60 லட்சத்துக்குமேல் கிளிகள் பறந்து போய்விட்டன!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

இன்று அ. இ. அ. தி. மு. க. வுக்குப் பொன்விழா நாள். ஆனால், மக்கள் மனம் கவர்ந்த தலைவரான எம். ஜி. ஆர் 1972ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தக் கட்சியைத் தோற்றுவித்த பின்பு, பலமுறை சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்று தமிழ்நாட்டை ஆட்சி செய்த இந்தக் கட்சி, இப்போது பொலிவிழந்திருக்கிறது. சொல்லப்போனால், அவரது அரசியல் வாரிசான அம்மாவின் மறைவுக்குப்பின் தொடங்கிய சரிவு, இப்போது கட்சியைத் தமிழக அரசியலின் அதல பாதாளம்வரை கொண்டுவந்திருக்கிறது. தன் கழகத்தில் ஒன்றரைக் கோடி உறுப்பினர்கள் இருப்பதாக ஜெய லலிதா பலமுறை பெருமைப்பட்டார். அவர் இறந்த சில மாதங்களிலேயே கட்சியாகிய ஆலமரத்திலிருந்து 60 லட்சத்துக்கும் மேல் கிளிகள் பறந்துபோய்விட்டன. இந்த மே மாதம் சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு ஆலமரம் ஒரு சிறிய முள் புதராக சுருங்கிவிட்டது போல் காட்சி அளிக்கிறது. இதற்குமேல் இந்தப் பஞ்சம் எங்கு கொண்டுபோய் விடுமோ தெரியவில்லை, ஆனால், சரிவு முடிவுக்கு வராது என்று மட்டும் புரிகிறது.

ஜெயலலிதா அம்மையார் இருந்திருந்தால் இந்தப் பொன்விழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டிருக்கும், விழாவை அவர் பிரம்மாண்டமாகக் கொண்டாடியிருப் பார். கட்சியை விட, இத்தனைக்கும் காரணமான தன் ஆளுமையைக் குறிப்பிட்டு, தன்னைத்தானே பாராட்டிக் கொண்டிருப்பார். கட்சி நிறுவனர் எம். ஜி. ஆரின் பெயர் அவ்வளவாக இருக்காது, முழுக்க அம்மாவின் புகழாரம்தான் நிறைந்திருக்கும். ஜெயலலிதா இறந்த பிறகு அ.இ.அ.தி.மு.க.வின் அதலபாதாள வீழ்ச்சிக்குப் பின் இருக்கும் சோகமான உண்மை இதுதான். கட்சித் தலைவரின் ஆளுமை மற்றும் மக்கள் செல்வாக்கை மட்டுமே நம்பியிருந்த அ.இ.அ.தி.மு.க., சமூக - அரசியல் கொள்கைகளில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வில்லை. ஆகவே, கட்சி உறுப்பினர்களையும் துணைத் தலைவர்களையும் ஓர் ஆலமரமாக நின்று ஒருங்கி ணைத்து, கிளிக்கூட்டங்களை சேர்த்து கட்சியை வளர்க் கும் அடுத்த தலைவர் கிடைக்காதபோது, அந்தக் கட்சி தேய்ந்துபோவதே இயல்பு.

**தமிழகத்தில் அண்ணா தி.மு.க. தனது பிடியை இழந்துகொண்டிருக்க, திராவிடநாட்டில் கால்பதிக்க அதன் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க. கடுமையாக முயற்சி செய்கிறது.**

ஐயோ பாவம், அண்ணா திமுகவுக்கு அம்மாவைப் போல அடுத்த தலைமை அகப்படவில்லை. மாறாக, தற்செயலாக முதல்வராக அமர்ந்த எடப்படியார் கொங்கு வட்டத்தின் முதலாளியாக மட்டுமே சுருங்கி இருந்தார். அவருக்கும் அவரது எதிரியான கட்சித் தோழர் ஓ. பன்னீர் செல்வத்திற்கும் இந்தப் பொன்விழா ஆண்டை எப்படிக் கடப்பது என்ற கவலை பெரிதா கவே இருக்கும். ஒருபுறம், பிற கட்சிகளின் கூடாரங் களை நோக்கிய தொண்டர்களின் ஊர்வலம், மற்றொரு புறம் தலைவர்களின் எதிர்காலம் எந்தெந்த ஊழல் வழக்குகளால் சிக்கலுக்குள்ளாகுமோ என்ற கவலை. பல தலைவர்கள் சரியாகவே உறங்குவதில்லை என்று இங்கு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இந்த சிக்கல்களுக்குள் ஓர் அரசியல் வரலாற்றின் சாக்கடையும் அடங்கும். இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் ஒரு தலைவர் ஊழலுக்காக தண்டிக்கப் பட்ட தருணங்கள் மிகவும் அரிது. எங்களின் காவல் துறையும் நீதிமன்ற அமைப்புகளின் செயல்பாடுகளும் தான் இந்த அவல நிலைக்குக் காரணம் என்று சொல்ல லாம். ஊழலை கவனிப்பதில் மக்களுக்கு உள்ள செவித் திறன், பார்வைத்திறன், மூளைத்திறன் ஆகியவை குறைவு என்பதும் இன்னொரு காரணம். ஊழல் என்பது வளர்ந்த ஒரு ஜனநாயக அமைப்பை உள்ளிருந்து அரித்துவிடும் என்றும், பொதுமக்கள்தான் அதற்கு பலிகடாவாக பாதிக்கப்படுவார்கள் என்பதையும் பொதுமக்கள் தெரிந்துகொண்டு விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். பல நேரங்களில் நன்கு படித்தவர்கள் கூட அரசியல் மற்றும் நிர்வாக ஊழலுக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தேவையில்லை என்று நினைக்கி றார்கள். ஊழல் என் றால் பணம் படைத்த காண்ட்ராக்டர்களிடமிருந்து அரசு அதிகாரிகளும் மந்திரிகளும் லஞ்சம் பெற்றுக் கொண்டு அரசுத் திட்டங்களை செயல்படுத்துவது மட்டும்தான் என்று அவர்களாகவே முடிவுகட்டிவிடு கிறர்கள். தங்களது சொந்த மேம்பாட் டுக்கான வேரையே இந்த ஊழல் வெட்டுகிறது எனறு அவர்களுக் குப் புரிவதில்லை. ஊழல்மீது இருக்கும் இந்த சகிப்புத் தன்மை, நாம் எதிர்கொள்ளும் அச்சுறுத் தல்களிலேயே மிகப்பெரியது. இன்னும் சொல்லப் போனால், ஊழல் வாதிகளைவிட இந்த சகிப்புத்தன்மை ஆபத்தானது. மாட்டிக்கொண்டாலும் காவல்துறை யினர், நீதிமன்றம், ஏன் வாக்காளர்களிடமிருந்துகூட தண்டனைகளின்றி தப்பிக்கலாம் என்ற நம்பிக்கை யில்தான் ஊழல்வாதிகள் தங்கள் ஊழலைத் தொடர்கிறார்கள்.

எனது சென்னை மடலில் முன்பு ஒருமுறை, பெப்ர வரி 2017இல் சொத்துக்குவிப்பு வழக்கில் உச்சநீதி மன்றம் ஜெயலலிதாவுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய பின்னரும்கூட ‘அம்மாவின் ஆட்சி’ என்றே எடப்பாடி பழனிச்சாமியும் அவரது அமைச்சர் படையும் தங்களது ஆட்சியைப்பற்றி தற்பெருமை பேசியிருந்ததைப் பற்றி விரிவாக எழுதியிருந்தேன். டிசம்பர் 2016இல் அவர் இறந்திருக்காவிட்டால் தனது உயிர்த்தோழியான சசிகலாவுடன் அவர் சிறைக்குச் செல்ல நேர்ந்திருக்கும். இந்த அண்ணா தி.மு.க. தலைவர்கள், தங்களது சட்டை பொக்கெட்டில், அலுவலக மேசையில், வீடு மற்றும் அலுவலக சுவர்களில், ஏன் கார்களில்கூட அம்மாவின் படத்தை விளம்பரப்படுத்திக்கொண்டார்கள். ஜெய லலிதா உயிருடன் இருந்தபோது, சுற்றி பொதுமக்கள் கவனிக்கிறார்கள் என்றபோதும்கூட அவர் காலில் விழுந்தார்கள். தங்களது புரட்சித்தலைவி இல்லாமல் தாங்கள் ஒன்றுமே இல்லை என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. எம். ஜி. ஆர் ஆட்சிக் காலத்தில் மூத்த அமைச்சராகவும் ஜெயலலிதாவின் ஆரம்பகால ஆட்சியின்போது சில ஆண்டுகள் அமைச்சராகவும் இருந்த சு. திருநாவுக்கரசர், அண்ணா தி.மு.க. கட்சி முறைமைகளைப்பற்றிக் கூறியது நினைவுக்கு வருகிறது. “எம்.ஜி.ஆர் மட்டும்தான் கட்சியில் நம்பர் ஒன். நாங்கள் எல்லாரும் பூஜ்ஜியங்கள், தலைவரைப் பின் தொடர்ந் த ால் மட்டுமே இந்த பூஜ்ஜியங்களுக்கு மதிப்பு” என்று அவர் கூறினார். அண்ணா தி.மு.கவின் அரசியல் வரலாறு இதுதான் எனும்போது, தங்கள் கட்சியின் தலைவர்கள் இல்லாமல் தடுமாறும் அ.இ.அ.தி.மு.க., பொன்விழா ஆண்டாக இருந்தாலும் இருளை நோக்கிப் பயணிப்பதில் ஆச்சரியமில்லை.


ஸ்டாலின் - ஆளுநர்

இந்த கடினமான காலகட்டங்களில்கூட கட்சி உறுப்பின்களை உற்சாகப்படுத்தி பொன்விழா கொண் டாட்டங்களுக்குத் தயார் செய்ய அம்மா கட்சித் தலை வர்கள் முயற்சி செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு தலைவர்தான் ஆர். பி. உதயகுமார். மே மாதம் சட்ட சபைத் தேர்தலில் தோற்கும்வரை எடப்பாடி ஆட்சிக் காலத்தின்போது இவர் வருவாய்த்துறை அமைச்சராக இருந்தார். மதுரையை அடுத்த திருமங் கலத்தில் கட்சித் தொண்டர்களின் கூட்டத்தில் பேசிய உதயகுமார், பொன்விழா கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் குறித்து விவாதித்தார். சமீபத்திய உள்ளாட்சித் தேர்தல் களில் தோல்வியுற்றதுபற்றி கவலைப்பட வேண்டாம் என்று கூறிய அவர், ஸ்டாலின் அரசு தேர்தல் முடிவு களில் ஆதிக்கம் செலுத்தி முறைகேடு செய்துள்ளதாகக் குற்றம்சாட்டினார். 1996 சட்டசபைத் தேர்தலில் மோச மாகத் தோல்வியைத் தழுவிய பின்னர், 2001 தேர்தலில் மீண்டெழுந்து வந்த அம்மாவைப் போலவே கட்சி மீண்டு வரும் என்று நம்பிக்கையுடன் கூறினார்.

ஐயோ பாவம், அண்ணா திமுக தொண்டர்கள் கூட்டத் தில் யாரும் அவரிடம், “அண்ணே, ஆனால் இப்போது அம்மா நம்முடன் இல்லையே” என்று கேட்கவில்லை.

ஒக்ரோபர் 6 மற்றும் 9ஆம் திகதிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களில் நடந்த உள்ளாட் சித் தேர்தலில் திமுக அபார வெற்றியைக் கண்டது. பலமுறை தமிழகத்தை ஆண்ட அண்ணா தி.மு.கவோ மிக மோசமான தோல்வியைத் தழுவியது. 153 மாவட்ட பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் பதவிக ளில், தி.மு.க. 139 இடங்களைக் கைப்பற்றியது, அ.தி.மு.க வுக்கு இரண்டு இடங்கள் மட்டுமே கிடைத்தன. திமுக வின் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ்கூட எட்டு இடங்களைப் பிடித்தது.

பஞ்சாயத்து யூனியன் வார்டு உறுப்பினருக்கான 1421 இடங்களில் திமுக 974 இடங்களைக் கைப்பற்றி யது. அண்ணா திமுகவுக்கு 212 இடங்கள் மட்டுமே கிடைத்தன. திமுகவுக்கு மாவட்ட கவுன்சில்களில் 89 வீதத்துக்கும் மேல் இடங்கள் கிடைத்தன. அண்ணா திமுகவுக்கு 1.31 வீத இடங்கள் மட்டுமே கிடைத்தன. காங்கிரஸூக்கு 5.23 வீத இடங்கள் கிடைத்தன. “அண்ணா திமுகவின் மீட்சிக்கு எந்த நம்பிக்கையும் தென்படவில்லை. எம். ஜி. ஆர் கட்சி இறுதிக்கட் டத்தை எட்டிவிட்டது. இது சோகமும் துரதிருஷ்டமும் நிரம்பிய சூழல்” என்கிறார் ‘இந்து’வில் பணிபுரிந்த மூத்த அரசியல் பத்திரிகையாளர் கல்யாணசுந்தரம்.

ஒருபுறம் அண்ணா தி.மு.க. தமிழகத்தில் தனது பிடியை இழந்துகொண்டிருக்கும் சூழலில், திராவிட நாட்டில் கால்பதிக்க அ.இ.அ.தி.முகவின் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க. கடுமையாக முயற்சி செய்துவருகி றது. பா.ஜ.கவின் மாநிலத் தலைவரும் முன்னாள் காவல்துறை அதிகாரியுமான அண்ணாமலை, ஐ.பி.எஸ் பதவியை விட்டுவிட்டு, காவிக்கட்சியில் இணைந்தார். ஓய்வுபெற்ற முன்னாள் உளவுத்துறை அதிகாரியும் தற்போதைய தமிழக ஆளுநருமான ஆர். என். ரவியிடம் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக அண்ணாமலை ஒரு மனு கொடுத்துள்ளார். ஒக்ரோபர் 12ஆம் திகதியன்று மாநிலத்தின் மூத்த பா.ஜ.க. தலை வர்களோடு ஆளுநர் மாளிகைக்குச் சென்று இவர் இந்த மனுவை அளித்தார். மறுநாளே மூத்த அமைச்சர் துரை முருகனோடு ஆளுநரை சந்தித்த ஸ்டாலின், சட்ட ஒழுங் கைக் கட்டுக்குள் வைப்பதற்காக தனது அரசு எல்லா

**வில்லன்களைப் பந்தாடுவது, கதாநாயகியுடன் டூயட் ஆடுவது என, சினிமா கவர்ச்சியால் மட்டுமே பதவியில் ஒருவரை அமர்த்த தமிழகம் மீண்டும் தயாராகிவிட்டதா? மக்களின் அடித்தட்டு அன்றாடப் பிரச்னைகளை அறிந்தவராகவும்கவலைப்படுபவராகவும் அவர் இருக்க வேண்டாமா?**

முயற்சிகளையும் செய்துவருகிறது என்று உறுதி யளித்தார்.

தி.மு.க.வின் நிர்வாகம் இதுவரை மக்களிடம் பிரபல மாகவும் நேர்மறையாகவும் பேசப்படுகிறது என்றாலும், ஸ்டாலின் கவலைப்படவேண்டிய சில அம்சங்களும் இருக்கின்றன. சட்ட ஒழுங்கு பற்றிய பா.ஜ.க. மனு மட்டுமல்லாமல், ஒரு கல்லூரி மாணவி கொலை செய்யப்பட்டது, பழிவாங்கு நடவடிக்கையில் தெற்கில் ஒரு பெண்ணின் தலை துண்டிக்கப்பட்டது ஆகியவை யும் அந்த பா.ஜ.க. மனுவில் இடம்பெற்றிருந்தன. இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் செயல்பாடுகள் அதிகரித்திருப்பது டெல்லியிலும் சென்னையிலும் உள்ள அரசுகளுக்குக் கவலை அளிக்கிறது. தேசிய புல னாய்வு ஏஜன்ஸி (The National Investigation Agency -NIA), தமிழ்நாட்டில் ஐ.எஸ்.ஐ தீவிரவாத அமைப்பு தொடர் பான செயல்பாடுகள் அதிகரித்துவிட்டதாக மத்திய அரசை எச்சரித்துள்ளது. முன்னாள் உளவுத்துறை அதிகாரி என்ற முறையில் அந்த அனுபவத்தோடு இந்த விஷயத்தைக் கையாளவும், மாநில அரசு இந்தத் தீவிர வாத அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்கிறது என்று கண்காணிக்கவும்தான் ஆளுநர் ரவி தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.

அரசியல் ரீதியாகவும் ஸ்டாலினுக்குக் கவலை

(02ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# பார்வையற்றோரின் கண் வெள்ளை பிரம்பு

**“ஒக்ரோபர் 15 சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



**நா. யோகேந்திரநாதன்**

“எனது பார்வை இல்லாமல் போனபின்பு நான் எவ்வளவோ புதிய விடயங்களை அறிந்து கொண்டேன். என் ஊனக் கண்களால் கண்டு கொள்ள முடியாத எவ்வளவோ விடயங்கள் இப்போது எனக்குத் தென்பட ஆரம்பித்து விட்டன.

எனது வீட்டுச் சுவர்களும் கதவுகளும் யன்னல் திரைச் சேலைகளும் மாடிப்படிகளின் கைப்பிடிகளும்கூட என்னுடன் மனம் திறந்து உரையாடுகின்றன!

முற்றத்துச் செண்பக மரத்தில் அமர்ந்திருந்து தங்கள் இனிய குரல்களில். பேசும் சிட்டுகளின் காதல் வார்த்தைகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மலர்கள் விரிந்து மொட்டவிழ்ப்பதையும் தேனீக்கள் அவற்றில் தேனை உறிஞ்சுவதையும் என்னால் பார்க்க முடிகிறது.

ஒருகாலத்தில் என் பார்வை விரியும் அளவுக்கே என் கிரகிப்பும் இருந்தது. ஆனால் இப்போது என் பார்வை எல்லையற்று விரிந்து எங்கெங்கெல்லாமோ சஞ்சரிக்கிறது. இதை ஓர் எல்லையற்ற சுகானுபவமாகவே நான் உணர்கிறேன்!”

இது பிரபல மாராத்திய எழுத்தாளர் வி. எஸ். காண்டேகர் தனது கண்பார்வை பறிபோன பின்பு தனது அனுபவ உணர்வுகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துகளாகும்.

வி. என். காண்டேகர் என்ற இந்த மராத்திய எழுத்தாளர் ஒருகாலத்தில் தமிழ் வாசகர்கள் மத்தியில் நன்கு பரிச்சயமானவராவார். இவரின் “கிரௌஞ்ச வதம்” என்ற நூலில் வரும் இலட்சியக் கதாநாயகன் திலீபன் ஏராளமான தமிழ் வாசகர்களின் நெஞ்சில் பதிந்து விட்ட ஒரு பாத்திரமாகும். அதன் காரணமாகவே பலர் தங்கள் பிள்ளைகளுக்கு “திலீபன்” எனப் பெயர் சூட்டினர்.

இவ்வாறு அந்த நாவல் மூலமும் அதன் இலட்சிய நாயகன் மூலமும் தனக்கென பெரும் வாசகர் வட்டத்தை உருவாக்கியிருந்த வி. எஸ். காண்டேகர் தன் கண்பார்வையிழந்த பின்பும் எழுதிக் கொண்டேயிருந்தார்.

அவரின் இலக்கியப் பயணத்தையோ அவரின் பார்வை குறைபாட்டால் பல வீனப்படுத்திவிட முடியவில்லை. மாறாக மேலும் மேலும் வேகமாக்கினார்.

பார்வைக் குறைபாட்டால் அவரைத் தோற்கடிக்க முடியவில்லை. அவர் அதைத் தோற்கடித்து முன் சென்றார். ஒரு காலத்தில் பார்வையற்றவர்களென்றால் சமூகத்துக்கு ஒரு சுமை என்ற நிலையே நிலவியது. அவர்கள் நடமாடுவது முதல்கொண்டு சகல தேவைகளுக்கும் மற்றவர்களின் உதவி தேவைப்படுபவர்களாக இருந்தனர்.

ஆனால்  இன்று நிலைமை மாறிவிட்டது.

இப்போது அவர்கள் குறையுள்ள மனிதர்களல்ல் அவர்கள் மாற்றுத் திறனாளிகள். அவர்களிடமிருந்து பார்வைத் திறன் பறிபோயிருக்கலாம். ஆனால், அவர்களின் ஏனைய புலன்கள் முன்பைவிட வேகமாக மேலெழுகின்றன. மாபெரும் சாதனைகளை ஈட்டுமளவுக்கு வலிமை பெறுகின்றன.

ஒரு மனிதனைக் குறைபாடு எவ்விதத்திலும் பாதிக்கலாம். அப்பாதிப்புக் காரணமாக அவன் முடங்கிப் போய்விட்டால் அத்துடன், அவனின் வாழ்வே அஸ்தமித்து விடுகிறது. ஆனால், அப்பாதிப்புக்கு எதிராக அவன் நம்பிக்கையுடனும் துணிவுடனும் எழுச்சி பெறும்போது அவன் முன்னரை விடப் பலசாலியாகிறான்.

**ஹெலன் ஹெல்லர்**

இவளின் வயது 18 மாதமாக இருந்தபோது இவளுக்கு ஏற்பட்ட ஒரு வித மூளைக் காய்ச்சல் காரணமாக அவள் தனது பார்வைத்திறன், பேச்சுத்திறன், கேட்கும் திறன் என்பவற்றை முற்றாகவே இழந்து விடுகிறாள். அவரைப் பராமரிக்க “ஆன் சல்வியன்” என்றொரு ஆசிரியை நியமிக்கப்படுகிறார்.

கெல்லரிடம் எஞ்சியிருந்த தொடுகை உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஏனைய உணர்ச்சிகளைக் கொண்டுவர சல்வியன் முயற்சிக்கிறார். மற்றவர்கள் கதைக்கும்போது கெல்லர் விரல்களால் அவர்களின் சொண்டுகளைத் தொடுவதன் மூலம் அவர்கள் சொல்பவற்றின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ளச் சிறிது சிறிதாகப் பயிற்றுவிக்கிறார். இவ்வாறான கடும் முயற்சிகள் மூலம் 19 வயதில் ஆங்கிலம், ஜெர்மன், லத்தீன், பிரெஞ்சு, ஸ்பெயின் என ஐந்து மொழிகளில் பார்வையற்றவர்களுக்கான 'ப்ரெய்லி' இயந்திரத்தில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்கிறார் ஹெல்லர்.

ஹெல்லர் தனது வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக வெளியிடுகிறார். அது ஏராளமாக விற்பனையானதுடன் பல விருதுகளையும் பெற்றுக்கொடுக்கிறது. மிகவும் சிரமப்பட்டுப் பேசப் பழகிய அவர் காலப்போக்கில் சிறந்ததொரு சொற்பொழிவாளராகிறார்.

பார்வை, கேட்டல், பேச்சாற்றல் என்பவற்றில் பாதிக்கப்பட்ட ஹெல்லர் அவற்றையே தனது ஆயுதங்களாக்கி அமெரிக்காவின் சிறந்த பெண்மணியாக ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டு உயர்ந்து நிற்கிறாள்.

வி.எஸ்.காண்டேகர், ஹெலன் கெல்லர் போன்றவர்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளால் முடங்கிப் போய்விட வில்லை. மாறாக அவற்றையே ஏணிகளாக்கி மேலும் மேலும் முன்சென்று சாதனைகளை ஈட்டினர்.



1990இல் ஐஸ்வர்யா என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்த ஒரு மிகமிகச் சிறு கதையை இங்கு நினைவூட்டுவது பொருத்தமாயிருக்கும்.

“அவர்” என்ற அந்தக் கதையில் வரும் ஒரு போராளி ஒரு போரில் தன் இரு கரங்களையும் இழந்து விட்டான். அவன் தன் நண்பர் மூலம் தன் தலைவனுக்கு தான் கைகளை இழந்து விட்டதால் மற்றவர்களுக்குச் சுமையாக வாழ விரும்பவில்லையெனவும் தான் சாவதற்கு முன்பு தலைவரை ஒருமுறை காணவேண்டுமெனவும் கடிதம் அனுப்புகிறான். இப்படிப் பல கடிதங்கள் அவன் தன் நண்பனைக் கொண்டு எழுதுவித்து அனுப்பிய போதும் எவ்வித பதிலும் வரவில்லை.

கடைசியாக அவன் தற்சமயம் தான் கால்களால் எழுதப் பழகி விட்டதாகவும் இக்கடிதத்தைத் தானே எழுதி அனுப்புவதாகவும் ஒரு கடிதம் எழுதி அவருக்கு அனுப்புகிறான். அடுத்த நாளில் தலைவரே நேரில் வந்து கட்டியணைத்து அவன் நம்பிக்கையுடன் கைகளின் வேலையைக் காலால் செய்யப் பழகியதையிட்டுப் பாராட்டுகிறார்.

இதிலும்கூட ஒரு இழப்பை இன்னொன்றால் ஈடு செய்வது் குறைபாடுகள் கண்டு முடங்கி விடாமல் நம்பிக்கையும் மறு ஆற்றல்களைப் பயன்படுத்தி முன் செல்வது் போன்ற செய்திகள் வலியுறுத்தப்படுகின்றன.

அவ்வகையில் ஒக்ரோபர் 15ஆம் திகதி சர்வதேச வெண் பிரம்புத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதாவது கண்பார்வையற்றோர் பிரச்னைகளையும் உணர்வுகளையும் உலகம் புரிந்து கொண்டு அவர்களுக்குக் கரம் கொடுக்க இந்நாள் அழைப்பு விடுக்கிறது.

இந்த வெண்பிரம்பு என்பது வெறும் ஊன்று கோலல்ல!

அது பார்வையற்றவர்களுடன் பேசுகிறது? அவர்களை வழி நடத்துகிறது? கண்ணிருந்தும் குருடரான சில மனிதர்கள் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கிறது. அதன் மொழியை அவர்கள் புரிந்து கொள்கின்றனர். அவர்கள் மொழியை அவை புரிந்து கொள்கின்றன.

**வெண் பிரம்பு தினம்**

பார்வையற்றவர்கள் குறைபாடுள்ளவர்கள் அல்ல. மாற்றுத் திறனாளிகள் என்ற செய்தியை உலகுக்குப் பிரகடனம் செய்யும் உன்னத நாள்.

**நன்றி - அருவி**



# கிழக்கு மாகாண தமிழர்களின் கல்வி நிலை எவ்வாறுள்ளது?

**மட்டுநகரான்**

கிழக்கு மாகாணம் கல்வி நிலையில் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதிலும் இம்முறை வட-கிழக்கு மாகாண தமிழர்களின் கல்வி நிலை பாரியளவிலான பின்னடைவினை எதிர்கொண்டுள்ளதை அண்மையில் வெளிவந்த பல தகவல்களும் உறுதிப்படுத்துகின்றன.

யுத்தத்திற்குப் பின்னரான நிலைமையில், இவ்வாறான பின்னடைவினை வட-கிழக்கு பகுதிகள் எதிர்கொண்டுள்ளன. அதிலும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் கல்வி நிலை பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது.

யுத்த காலத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் சாதனைகளைப் படைத்த தமிழர்களின் கல்வித்துறையானது, இன்று பாரியளவிலான பின்னடைவினைக் கண்டுள்ளமை தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கொரோனா சூழலைப் பலர் இந்தக் கல்வியின் பின்னடைவுக்குக் காரணம் காட்டினாலும், யுத்த சூழ்நிலையினைவிட இன்றைய கொரோனா சூழ்நிலை பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதா என்ற கேள்வியெழுகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையே பாரிய வீழ்ச்சி நிலைக்கு சென்றுள்ளது. இதற்கு வெறுமனே நாங்கள் யாரையும் தனித்துக் குற்றஞ் சாட்டிவிட முடியாது என்றாலும், கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலைக்கான வீழ்ச்சிக்கு அரசாங்கம் முழுமையான பொறுப்பினைக் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இங்கு குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், தமிழர்களின் கல்வி நிலையின் வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. யுத்தம், இனப்பிரச்னை, இயற்கை அனர்த்தங்கள், கோவிட் தாக்கம் என பல்வேறு நிலை காரணமாக கல்வியில் வீழ்ச்சியை எதிர்கொண்டு வருகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. இதில் ஒரு முஸ்லிம் கல்வி வலயமும், நான்கு தமிழர்களின் கல்வி வலயமும் காணப்படுகின்றன. இவற்றில் முஸ்லிம் கல்வி வலயமே இன்றுவரையில் கல்வியில் முதல் நிலையிலிருந்து வருகின்றது. குறித்த கல்வி வலயமானது, ஆரம்பிக்கப்பட்டு சுமார் 10வருடங்களே கடந்துள்ள நிலையில், கல்வித்துறையில் பாரியளவிலான சாதனை படைத்துள்ளது. குறித்த வலயமானது மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் என்ற முஸ்லிம் கல்வி வலயமாகவுள்ளது. இது முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இந்த வலயத்தில் உள்ள 99வீதமான பாடசாலைகள் எழுவான் கரையிலேயே அமைந்துள்ளன.

ஏனைய நான்கு கல்வி வலயங்களில் ஒரேயொரு வலயம் மட்டுமே முழுமையாக எழுவான்கரையில் உள்ளது. ஏனைய கல்வி வலயங்கள் படுவான் கரையும், எழுவான்கரையும் இணைந்த வகையிலேயே கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

படுவான்கரையினைப் பொறுத்தவரையில், கல்வி நிலையானது இன்று ஒரளவு நல்ல நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றது. எழுவான்கரையினைப் பொறுத்தவரையில், நீண்ட நிலப்பரப்பும் தொடர்பற்ற கிராமங்களும் உள்ளதன் காரணமாகவும், நீண்ட தூர இடைவெளிகளில் பாடசாலைகள் உள்ள காரணத்தினாலும் பாடசாலை கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதில் பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

போக்குவரத்து, மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழும் மக்களும் உள்ள இப்பகுதியில் தொடர்ச்சியான கல்வியை வழங்குவதில் ஆசிரியர்களும் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர். எவ்வாறாயினும் கல்வியை பெற்றுக்கொள்வதில் பிள்ளைகள் மத்தியிலான ஆர்வம் என்பது கடந்த சில வருடங்களாக குறைந்து வருவதைக் காணமுடிகின்றது.

கல்வியைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை இலகுபடுத்தப்பட்டுள்ளது என அரசாங்கம் கூறுகின்றபோதிலும், படு

**கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், தமிழர்களின் கல்வி நிலையின் வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. யுத்தம், இனப்பிரச் சினை, இயற்கை அனர்த்தங்கள், கோவிட் தாக்கம் என பல்வேறு நிலை காரணமாக கல்வியில் வீழ்ச்சியை எதிர்கொண்டு வருகின்றது.**

வான்கரைப் பகுதியில் மக்கள் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் மிகவும் கஸ்டங்களையே தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், கல்வி நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் பொது அமைப்புகள், தமிழ் கல்விமான்களின் செயற்பாடுகள் என்பது மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. இன்று இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலை நிர்வாகம் மற்றும் கல்விப் பணிமனைக்கு அப்பால், பொது அமைப்புகளும் கல்வியிலாளர்கள் கூட்டமைப்பும் இணைந்து சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் தங்கள் இனம் சார்ந்து, கல்வி தொடர்பான பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த 30வருடத்திற்கு மேலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகமாக தமிழ்ச் சமூகம் உள்ள நிலையிலும், அவ்வாறான செயற்பாடுகள் பெரியளவில் நடைபெறவில்லை. குறிப்பாக கிழக்கு மாகா ணத்தில் பிரபல தமிழ் பாடசாலைகளில் அவ்வாறான செயல்பாடுகள் முன்னெடுக்கப் பட்டாலும், புறநகர்ப் பகுதி மற்றும் கிராமப் புறப் பாடசாலைகளில் அவ்வா றான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதில்லை.

இவ்வாறான மாணவர்களை காட்டி, சிலர் புலம்பெயர் மக்களிடமும், சர்வதேச நாடுகளிடமும் உதவிகளைப் பெறுகின்ற போதிலும், அவை முறையான திட்டமிடல்கள் இல்லாமல் செலவு செய்யப்படுவதனால், அவை பிரயோசனமற்ற செயல்பாடுகளாகவே இருக்கின்றன.

குறிப்பாக படுவான்கரையில் மிகவும் கஷ்டநிலையில் உள்ள பாடசாலைகளை ஒருங்கிணைத்து மட்டக்களப்பு மேற்கு வலயம் முன்னெடுத்துவந்த, மாணவர்களுக்கான இடமாற்ற கற்கை நடவடிக்கைகள் சில வருடங்கள் சிறப்பாக நடைபெற்ற நிலையில், அதற்கான ஆதரவுகள் இன்மையினால் அவை கைவிடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் அழைத்துவந்து, படுவான்கரையில் ஒரு பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு, பரீட்சைகளை நோக்காக கொண்டு, அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. புலம் பெயர் மக்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வந்த அந்த கற்கை செயற்பாடுகளினால் பாரியளவிலான அடைவு மட்டங்களை மாணவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். எனினும் அதற்கு உதவியளித்தவர்கள் பின்னாளில் பின்வாங்கிய காரணத்தினால், அதனைத் தொடர முடியாத நிலை கல்வித் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் 2008ஆம் ஆண்டு தொடக்கம் கிழக்கு மாகாணக் கல்வி அடைவு மட்டங்களில் தொடர்ச்சியான பின்னடைவுக்கு அரசியலும் மிக முக்கிய காரணமாகவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் பாடசாலைகளுக்கு சிற்றூழியர் நியமிப்பதிலிருந்து ஆசிரியர், கோட்டக்கல்வி அதிகாரிகள், வலய கல்வி அதிகாரிகள் என பல்வேறு தரப்பட்ட நியமனங்களும் அரசியல் நோக்குடன் மட்டுமே முன்னெடுக்கப்பட்டு வந்ததாக வும், அதன் காரணமாக தகைமை யுள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்ட தும், கல்வித்துறையினை கட்டியெழுப்ப முடியாமைக்கான காரணங்களாகும். அதனை மாற்றியமைக்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைத்தோம், வழக்குத் தாக்கல் செய்தோம். ஆனால் ஒரு சிலவற்றுக்கு தீர்வு கிடைத்தாலும், பலதுக்கு இதுவரையில் தீர்வில்லை. சரியானவர்களுக்குச் சரியான பதவிகள் வழங்கப்பட்டிருந்தால், இன்று கிழக்கு மாகாணக் கல்வித்துறை உயர்ச்சியடைந்திருக்கும். ஆனால், அது முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழர்களின் கல்வி தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டிய கட்டாய தேவை இன்று எழுந்துள்ளது. ஒன்பது மாகாணங்கள் உள்ள நிலையில் கிழக்கு மாகாணமும் வடக்கு மாகாணமும் இன்னும் இறுதி மாகாணங்களாகவே இருந்து வருகின்றன.

இவ்வாறான நிலையினை மாற்ற வேண்டுமானால், தமிழ் சமூகத்தில் உள்ள கல்வியியலாளர்கள் சிந்திக்கவேண்டிய காலமாக இது உள்ளது. கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், இனி வரும் காலங்களில் கல்வியினால் வளர்ச்சி பெறுவதன் மூலமே இந்த மாகாணத்தினைத் தமிழர்கள் தக்கவைப்பதற்கான சூழ்நிலையிருக்கின்றது. அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நாங்கள் இருக்கின்றோம். இன்று கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைந்து செல்லும் போது, நாங்கள் அனைத்துத் துறைகளிலும் பின்நோக்கிச் செல்லும் நிலையானது தமிழர்களுக்கு மிகவும் பாதகாமான நிலையினை ஏற்படுத்தும்.

அண்மையில் வெளியான கா.பொ.த.சாதாரண தர முடிவுகள் தமிழர்களின் கல்வி நிலையினை படம்போட்டுக் காட்டியுள்ளது. இன்று மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் தேசிய கல்வியில் போட்டி நிலையில் உள்ளபோது, தமிழர்களின் ஏனைய கல்வி வலயங்களில் பாதாளத்தில் உள்ளதானது, தமிழர்களுக்கான கல்வி நிலையில் சிவப்பு எச்சரிக்கையாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான கிழக்கு பல்கலைக்கழகம் உள்ளபோதிலும், தமிழர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான எந்தவித முயற்சியினையும் அது மேற்கொள்ளாத நிலையில், தேசிய கல்விக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் மட்டும் கண்ணும் கருத்துமாகவுள்ளது.

இந்தவேளையில் புலம்பெயர் மக்கள் வடக்கு கிழக்கு என பிரிந்து நிற்காமல், கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பில் சிந்தித்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும். இன்று நீங்கள் கவனம் செலுத்தாது போனால், கிழக்கு மாகாணம் தமிழ்த் தேசிய எழுச்சிப் பரப்பிலிருந்து மிக விரைவில் அகன்றுவிடும் என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். ■



# அதிரடி தாக்குதலுக்குள்ளான ஹவாயின் பேர்ள் ஹாபர் இப்போது எப்படி உள்ளது?



இலங்கையில் இருக்கும் இயற்கைத் துறைமுகமான திருகோணமலை துறைமுகம்போல, ஹவாயிலும் ஓர் இயற்கைத் துறைமுகம் இருக்கின்றது. பேர்ள் ஹாபர் என்ற பெயரைக் கொண்ட இந்தத் துறைமுகம்தான் இரண்டாம் உலகயுத்தத்தின் திருப்புமுனையாக இருந்தது. இந்த பேர்ள் துறைமுகம்தான் அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய முக்கியமான கடற்படைத் தளமாக இருந்தது. சுமார் 80 வருடங்களுக்கு முன், அதாவது 1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி திடீரென உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது இங்கே உள்ள பேர்ள் ஹாபர் என்ற இயற்கைத் துறைமுகம்.

அதற்குக் காரணம், ஜப்பானியரின் அதிரடித் தாக்குதலில் இந்தத் துறைமுகம் தரைமட்டமாக்கப்பட்டுச் செயலிழக்கப்பட்டதுதான். 2ஆம் உலக யுத்தத்தின் போது ஜப்பானின் கூட்டுப் படையினர் இரகசியமாக ஏற்கனவே திட்டமிட்டபடி, பேர்ள் ஹாபர் தாக்குதலுக்குத் தயாரானார்கள். ஜப்பானின் ஆறு விமானந்தாங்கி யுத்தக் கப்பல்கள் 1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி ஹவாய் தீவுகளை நோக்கிப் புறப்பட்டிருந்தன. இந்தக் கப்பல்களில் 360 தாக்குதல் விமானங்களும், 48 தற்பாதுகாப்பு விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. முதற்கட்டமாக ஜப்பானிய விமானங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு தாக்குதலுக்குத் தயாராகின. முதற்பிரிவு விமானங்கள் முக்கியமான நிலைகளைத் தாக்குவது, அதைத் தொடர்ந்து இரண்டாவது பிரிவு விமானங்கள் யுத்தக் கப்பல்களை தாக்கி அழிப்பது. மூன்றாவது பிரிவு விமானங்கள், தாக்கப்படாமல் எஞ்சியிருக்கும் நிலைகளைத் தேடி அழிப்பது.

90 நிமிடங்கள் நடந்த இந்தத் தாக்குதலில் பேர்ள் ஹாபரில் நின்ற அமெரிக்காவின் 18 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 2403 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது அவர்களின் தாய் மொழியான ஜப்பானிய மொழியிலேயே அவர்களின் உரையாடல் எல்லாம் இடம் பெற்றதாம். ஆங்கில மொழி பாவிக்கப்படாததால் அவர்களின் உரையாடல்களை இடைமறித்து ஒட்டுக் கேட்டவர்களால் கூட என்ன நடக்கிறது என்பதைப் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தப் பிரமாண்டமான அதிரடித் தாக்குதலைக் கவனமாகத் திட்மிட்டுச் சாதித்துக் காட்டியவர் ஜப்பானிய அட்மிரல் யமாமோட்டோதான். யமாமோட்டோவின் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அட்மிரல் நகுமோ சூச்சி (Nagumo Chuchi) என்பவர்தான் துணிந்து முன்வந்து தளத்தில் நின்று செயல்படுத்தினார். மிக முக்கியமான அழிப்பு நடவடிக்கைகள் முதல் 30 நிமிடத்திலேயே செய்து முடிக்கப்பட்டன. அரிசோனா, ஒக்லஹோமா, கலிபோர்னியா, நிவாடா, வெஸ்ட்வேர்ஜினியா போன்ற யுத்தக்கப்பல்கள் துறைமுகத்தில் வைத்தே மூழ்கடிக்கப்பட்டன.

ஜப்பான் விமானத்தின் குண்டுத் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட ‘அரிசோனா’ கப்பல் இப்பொழுதும் அதே இடத்தில் கடலுக்குள் மூழ்கிய நிலையில் இருக்கின்றது. இதற்கு அருகே நினைவு மண்டம் ஒன்று எழுப்பி இருக்கிறார்கள். மண்டபத்தில் இருந்து நீருக்குள் இருக்கும் கப்பலைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. தாக்குதலின்போது, மரணித்தவர்களின் பெயர்கள் அங்கே இடம் பெற்றிருக்கின்றன. அமெரிக்கா கைப்பற்றிய ‘கெயிற்ரென்’ என்று சொல்லப்படுகின்ற ஜப்பானியர்களின் தண்ணீரில் செல்லக்கூடிய கறுப்பு நிறத்திலான தற்கொலை குண்டுதாக்கியை அங்கே பார்வைக்கு வைத்திருந்தார்கள்.

பேர்ள்ஹாபர் கரையில் மௌனத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தது பவ்பின் என்ற நீர்மூழ்கிக் கப்பல். இந்த நீர்மூழ்கி சுமார் 15 இற்கும் மேற்பட்ட பெரிய கப்பல் களைக் கடந்த காலங்களில் மூழ்கடித்திருந்தது. இந்த நீர்மூழ்கி விமான எதிர்ப்புப் பீரங்கியை தன்னகத்தே கொண்டது. 1944 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22 ஆம் திகதி 445 அடி நீளமான ‘சுஷ்கிமா மாறு’ என்ற ஜப்பானியக் கப்பலை இரவு 10 மணியளவில் பவ்பின் மூழ்கடித்திருந்தது. 775 பள்ளிச் சிறார்கள் அதில் கொல்லப்பட்டார்கள். மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் சிறார்கள் இருந்த விடயம் பவ்பின் மாலுமிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. சுமார் 20 வருடங்களின் பின்தான் பவ்பின் மாலுமிகளுக்குத் தெரிய வந்தது. மூழ்கடிக்கப்பட்டிருந்த சுஷ்கிமா மாறு 33 வருடங்களின் பின் 1977 ஆம் ஆண்டு ஆழ்கடலில் இனங்காணப்பட்டது. ஜப்பானிய கவிஞர் ஒருவர் மரணித்த அந்த சிறுவர்களைப் பற்றி எழுதிய கவிதையில் இரண்டு வரிகளை ஆங்கிலத்தில் தருகின்றேன்.

'They dreamed because they were alive. Wen they became victims, their dreams for the future died with them.'

இதை வாசித்தபோது, எனக்கு தாயகத்தில், விமானக் குண்டுவீச்சில் மரணித்த பள்ளிச் சிறார்களின் இனிய கனவுகளும் அவர்களுடனே மரணித்த நினைவுதான் வந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமெரிக்கா 52 நீர்மூழ்கிகளை இழந்திருந்தது. அதே சமயம் நீர்மூழ்கியில் இருந்த 3500 மாலுமிகள் வெவ்வேறு சம்பவங்களின் போது, இந்த யுத்தத்தில் இறந்து போயிருந்தனர். இந்த அதிரடித் தாக்குதலில் ஜப்பான் தரப்பில் அதிக சேதம் ஏற்படவில்லை. 29 விமானங்களையும் 5 நீர்மூழ்கி கப்பல்களையும் ஜப்பான் இழந்தது. இந்த அதிரடித் தாக்குதலில் 64 ஜப்பானிய வீரர்களும் கொல்லப்பட்டனர்.

தங்கள் நாட்டின் மீது இருந்த அதீத பற்றுக் காரணமாக 3,862 ஜப்பானிய தற்கொலைப் படையினர் இரண்டாம் உலக யுத்தத்தின் போது தற்கொலைத் தாக்குதல் செய்து மரணமாகினர். சுமார் 7,000 க்கும் அதிகமான அமெரிக்க கடற்படையினர் இப்படியான தற்கொலைத்

குரு அரவிந்தன்

தாக்குதலின் போது கொல்லப்பட்டிருந்தனர். ஜப்பானியர்களின் எண்ணிக்கைப் படி தற்கொலைப் படையினரால் சுமார் 81 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டும், 195 கப்பல்கள் சேதமாக்கப்பட்டும் இருந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஆழ்கடலில் சென்ற யுத்தக் கப்பல்கள் எல்லாம் இந்த தற்கொலைப் படைக்கு அஞ்சியே பயணத்தை மேற்கொண்டன.

இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்தோடுதான் அமெரிக்கா குரோஷிமா என்ற ஜப்பானிய தீவுமீது ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி 1945 ஆம் ஆண்டு அணுகுண்டுத் தாக்குதல் நடத்தி இருந்தது. இத்தாக்குதலில் சுமார் 80,000 மக்கள் அந்த இடத்திலேயே இறந்து போனார்கள். அந்த அதிர்ச்சியில் இருந்து ஜப்பான் எழுந்திருக்கு முன் மீண்டும் மூன்றாவது நாள் நாகசாகி மீது அடுத்த அணுக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் 40,000 பேர் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக வேறு வழியில்லாமல் ஜப்பான் சரணடைந்தது.

ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று ஹவாயில் தரைதட்டிய போது அதிலிருந்த எல்லோரும் கொல்லப்பட 23 வயதான சஹாமாகி (Kazuo Sakamaki ) என்பவர் மட்டும் மயங்கிய நிலையில் ‘வைமனாலோ கடற்கரையோரம் உயிரோடு பிடிபட்டார். இரண்டாம் உலக யுத்தத்தின் போது உயிரோடு முதலில் கைப்பற்றப்பட்ட ஜப்பானிய வீரர் இவர்தான். இவர் சான்ஐலண்டில் கைதியாக இருந்தபோது, தற்கொலை செய்து வீரமரணம் அடையப் போவதாக கேட்டபோதும் அதற்கு அனுமதிக்கப் படவில்லை. யுத்தம் முடிவடைந்த பின் இவர் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டார். எதிரியிடம் அகப்பட்ட யுத்தக் கைதி என்பதால் அவருக்கு அங்கே அதிக வரவேற்பு இருக்கவில்லை.

ரெக்ஸாசில் நடந்த சரித்திர மகாநாடு ஒன்றுக்கு 1991 ஆம் ஆண்டு இவர் அழைக்கப்பட்ட போது உணர்ச்சி வசப்பட்டு பெரிதாக இவர் அழுததாகத் தெரிகின்றது. அப்போது காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்த அவர் பயணித்த நீர்மூழ்கிக் கப்பலுக்கும் அவரை அழைத்துச் சென்று காட்டினார்களாம். இவர் 1999 ஆம் ஆண்டு தனது 81 வது வயதில் மரணமானார். ஒரு கைதியின் வலியை உணர முடியாவிட்டாலும் யுத்தத்தின் வலியை உணர்ந்தவர்கள் நாங்கள், அதனால்தான் ஹவாய் பேர்ள் ஹாபர் யுத்தக் காட்சிச் சாலைக்குச் சென்றபோது, அரிசோனா கப்பல் நினைவாலயத்தில் மலர் வைத்து மரணித்தவர்களின் உறவுகள் விம்மி விம்மி அழுதபோது, மரணத்தின் வலியை என்னால் உணரமுடிந்தது. உறவுகளைக்கூடச் சொந்த மண்ணில் நினைவு கூரமுடியாத சூழ்நிலையில் இன்று எங்கள் தமிழ் இனம் இருப்பதை நாங்கள் யாரிடம் சொல்லி அழுவது? ■







# பயணங்கள்!

- மாலி -

6



# விடுதலை புலிகளின் ‘தனிநாடு’!

இலங்கையின் வட பகுதியில், வவுனியாவுககு அப்பால், நிருவாக ரீதியாக ஒரு தனிநாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைத்தேயிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் செலவினத்தில் அவர்கள் இந்த நிர்வாகத்தை மேற்கொள்கிறார்கள். இந்த நிர்வாகச் செலவினம்தான் இலங்கை அரசுக்கு இப் பிரதேசம் மீதுள்ள ஒரே ‘பிடி’. இதனை இலங்கை அரசு நிறுத்தினால் தப்பித்துப் பிழைக்குமோ என்னவோ, ஆனால், இப் பிரதேசம் அநேகமாக ஒரு தனிநாடேதான்.

இதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெளிவாக உணர்ந்தேயிருக்கிறார். மோதல் தவிர்ப்பிலிருந்து வெளிப்பட்ட புலிகளின் புதிய பலத்தைக் கண்டு சந்திரிகா தடுமாற்றமடைந்திருந்தாலும், அவருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிடையே ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தையும், அதன்மீதான நடவடிக்கைகளையும் அறிவிக்குமுகமாக புதிய பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த அன்று மாலை படைத் தலைவர்களும் உடனிருக்க, அவர் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு அவர் அளித்த உறுதியான பதில்களிலிருந்து, இதனைத் தெளிவாகவே புரிந்துகொள்ள முடிந்தது. உண்மையிலே, நாணயம் தவிர்ந்த நீதி நிர்வாகம், சட்ட வாக்கம், வரி உள்ளிட்ட அனைத்தும் இப் பிரதேசத்தில் புலிகளாலேயே மேற்கொள் ளப்படுகின்றன. இங்குள்ள அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள்போன்ற அரச நிர்வாகத்தின் பிரதிநிதிகள், ‘எங்கள் அலுவல்களில் அவர்கள் (புலிகள்) தலையிடு வதில்லை; ஒரு பரஸ்பர புரிந்துணர்வு எம்மிடையே இருக்கிறத் அவர்கள் மிகவும் ஒத்துழைப்பாகவே இருக்கிறார்கள்’ என்றுதான் கூறுவார்கள்.

யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் பொன்னம்பலத்தைச் சந்தித்தவேளை, மாவட்ட செயலாளர் திரு க. குணராசா (செங்கை ஆழியான்), திருமதி சிதம்பரபத்தினி திலகநாயகம் போல் உள்ளிட்ட பல உதவி அரசாங்க அதிபர்களும் உடனிருந்தார்கள். அப்போது, அரசாங்க அதிபர் இதையேதான் கூறினார்.

‘விடயங்களை விடுதலைப் புலிகளுடன் நாம் ஆலோசிக்கிறோம் எங்கள் செயல்பாடுகளையும் அவர் கள் ஏற்றுக்கொள்கிறார்கள்’ - என்றும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகம், வங்கிகள் தொடர்பிலும் நிலைமை இதுவேதான். ஆக, இந்த வார்த்தைகளிலிருந்து அங்கு புலிகளின் அதிகார பலத்தைப் புரிந்துகொள்வதில் அவ்வளவு கடினமிருக்காது.

யாழ்.செயலகத்துக்கு எதிர்த்தாற்போல், பழைய பூங்காவையடுத்து அமைந்த கட்டட திணைக்கள பல்மாடிக் கட்டடத்தில் ‘தமிழீழ நிர்வாக சேவை’ என்பதனை அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எனினும், ‘இது அரச ஊழியர்களுக்கான அமைப்பேயன்றி, நிழல் அரசாங்கமல்ல’ என்று புலிகள் இயக்க பிரமுகர் ஒரு வர் தெரிவித்தார்.

மக்கள் தமது சம்பளம், ஓய்வூதியம், பிறப்பு, இறப்புப் பதிவு போன்ற வற்றுக்குத்தான் கச்சேரிக்குச் செல்கிறார்கள். இதுதவிர, அவர்களின் பொது வாழ்வுக்கான தேவைகளுக்கு அவர்கள் புலிகளையே நாடவேண்டி இருக்கிறது. பொதுவில், புலிகளின் இந்த நிர்வாகத்தில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. அந்த ஒழுங்குக்கு அமைவாக மக்கள் அங்கு வாழ்கிறார்கள். குற்றச் செயல்கள் வெகுவாக குறைந்திருக்கின்றன. பெரும் சமூக பிரச்னையாகவிருந்த சீதனப் பிரச்னைக்ககு தீர்வாக ‘சீதன தடைச் சட்டம்’ கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக பல திருமணங்கள் விரைவாக நிறைவேறியிருப்பதாக கூறுகிறார்கள். பெண் உரிமைகள் தொடர்பிலும், மணமான ஒரு பெண் தனித்துநின்று வழக்காடும் உரிமை, தேசவழமைச் சட்டத்தின் முதுசொம், தேடிய தேட்டம் போன்ற வற்றில் பெண்ணுக்கும் பங்கு போன்றவை சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட் டிருப்பதாக அங்குள்ள சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

ஆக, ஒரு நிர்வாக ஒழுங்கு இருந் தாலும், மக்கள் அதனைப் பூரணமாக ஏற்றுக்கொள்கிறார்களா என்பது ஒரு கேள்வி. ஆனால், புலிகளின் இந்த நிர்வாகத்தை ஒரு சாதாரண அரசு நிர்வாகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. பிரி வினை கோரி, ஓர் அரசாங்கத்தை எதிர்த்து கடுமையான ஆயுத போராட்டத்தை நிகழ்த்திக்கொண்டு, தாம் உருவாக்க எண்ணும் நாட்டை நோக்கிய ஒரு சமுதாய அமைப்பிலேயே அவர்களளவில் புலிகள் செயல்படு கிறார்கள். இந்த விதத்தில், விரும்பியோ விரும்பாமலோ நிர்ப்பந்தங்கள் பல - தேவைகள் பல அவர்களுக்கு இருக்கின்றன. இந்த நிர்ப்பந்தங்கள் - தேவைகள் பொது மக்களை அல்லது வர்த்தகர்கள், உத்தியோகத்தர்களை எவ்வாறு அவர்களது அன்றாட வாழ்விலோ அல்லது பொதுவாகவோ பாதிக்கின்றன என்பதன் அடிப்படையிலேயே மக்கள் அபிப்பிராயம் தங்கியிருக்கிறது. இந்த அபிப்பிராயங்களை மக்கள் வெளிப்படுத்துகிறார்கள். தங்களை அறிமுகப்படுத்தி தங்கள் கருத்துக்கள் வெளியிடப்படுவதையிட்டு அவர்கள் விரும்பாமலோ அல்லது அதற்கு அவர்கள் அஞ்சவோ கூடும். ஆனால், பொதுவில் தம் மனக் கிடக்கைகளை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அதற்கு அங்கு தடையுமில்லை. ஆனால், இப்படி ஆயுதங்களுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு இயல்பாகவே சில மனோநிலைகள் ஏற்பட்டுவிடுகின்றன. உதார ணத்துக்கு, அங்குள்ள புலிகளின் பணிமனைகள் அனைத்திலும் ‘தலைவருக்கு’ என்று எழுதப்பட்டு சிவப்பு நிற அஞ்சல் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதனுள் சேர்ப்பிக்கப்படும் கடிதங்கள் பிரபாகரன் முன்னிலையிலேயே பிரிக்கப்பட்டு, தொடர்பான பதில் நான்கு, ஐந்து தினங்களில் உரியவருக்கு வந்து சேரும் என்று பொதுமக்கள்தான் கூறினார்கள். அதேவேளை, அப்படிச் சேர்ப்பித்தால் ‘இயக்கம் சார்ந்த மற்றையோர் ஏதாவது எண்ணிவிடு வார்களோ’ என்று யோசிப்பதுண்டு என்றும் சொன்னார்கள்.

# இலங்கை அரசின் செலவில் நிர்வாகம்

நிறுவனமொன்றின் மேலதிகாரி ஒருவர் பல விடயங் களையும் பற்றி பேசிக்கொண்டிருந்தார். ‘இப்படி ஒருவருடன் பேசி மிக நீண்ட நாள்கள்’ என்றார் அவர். ‘இங்கு எவருடனும் இப்படி பேசக்கூடியதாக இல்லை. அதிலும், ஒருவரை சிறிது நாள்கள் காணாமலிருந்துவிட்டால், பின்னர் அவரைக் காணும்போது அவருடன் பேசுகையில் சற்று யோசித்து, அளவாகவே பேசவேண்டும்‘ என்றார்.

மக்கள் மத்தியில் இயல்பாக ஏற்பட்டுவிட்ட மனோநிலையைத்தான் அவர் குறிப்பிட்டார்.

ஆக, இப்படி மக்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களிலிருந்து மூன்று வகையினராக அவர்களைக் காணலாம். ஒருசாரார், விடுதலைப் புலிகளுக்கு அவர்களின் நடவடிக்கைகள் எதுவானாலும் ஆதரவானவர்கள். மற்றையவர்கள், மேலே கூறியபடி புலிகளின் நிர்ப்பந்தங்கள், தேவைகளை உணர்ந்து, அவர்களின் நடவடிக்கைகளில் பூரண உடன்பாடில்லாவிடினும், புரிந்துணர்வோடு அவற்றை ஏற்றுக்கொள்பவர்கள். மீதமானோர் அவர்களின் நடவடிக்கைகளை கொள்கையளவில் ஏற்காதவர்கள். (16 ஆம் பக்கம் பார்க்க...)



ஈழநாடு





சூரியா தயாரிப்பில் வெளியான படம் இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும் படம் அண்மையில் வெளியானது. இந்தப் படம்

இந்தப் படம் மராத்தி படமான ரங்கா படாங்கா படத்தின் தழுவல் என்று விமர்சிக்கப்பட்டது. இதையடுத்து அந்தப் படத்தின் உரிமையை பெற்ற தயாரிப்பாளருக்கு பெரும்தொகையை தாமாக முன்வந்து நட்டஈடாக கொடுத்துள்ளார் சூரியா.

அரண்மனை-3, பிசாசு-2 போன்ற பேய் படங்களில் நடித்திருக்கிறார் ஆண்ட்ரியா. இதில் மிஷ்கின் இயக்கியுள்ள பிசாசு-2 படத்தில் முக்கிய வேடத்தில் நடித்துள்ள ஆண்ட்ரியா 15 நிமிடங்கள் நிர்வாண காட்சிகளில் நடித்திருக்கிறார்.

மாலைதீவுக்கு அடிக்கடி ‘விசிட்’ அடிப்பதை வழக்கமாக வைத்துள்ள ஆண்ட்ரியா அங்கு நீச்சல் உடைகளில் எடுத்த படங்களை தனது சமூகவலை தளத்தில் பதிவிட்டுள்ளார். அந்தப் படத்திற்கு ஒரேநாளிலேயே ஒரு இலட்சம் விருப்புகள் கடந்தன.





பூரி ஜெகநாத் இயக்கத்தில் விஜய் தேவரகொண்டா, அனன்யா பாண்டே, ரம்யா கிருஷ்ணன், ரோனித் ராய், விஷ்ணுரெட்டி உட்பட பலர் நடித்து வரும் படம் லிகர். படம் தெலுங்கு, தமிழ், ஹிந்தி, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் வெளியாகவுள்ளது.

இந்தப் படத்தின் மூலம் முதன்முதலாக இந்திய படத்தில் அறிமுகமாகிறார். உலகப் புகழ் பெற்ற குத்துச்சண்டை வீரர் மைக் டைசன். இவருடன் விஜய் தேவரகொண்டா நடிக்கப்போகும் காட்சிகளுக்காக லிகர் படக்குழு அமெரிக்கா சென்றுள்ளது.



சிவகார்த்திகேயன் நடிப்பில் கடந்த வாரம் டாக்டர் திரைப்படம் திரையரங்கில் வெளியானது.

படம் வெளியான முதல் நாளிலேயே ரூ. 7 கோடியை வசூல் செய்துள்ளது. திரையரங்குகளுக்கு 50வீத அனுமதி வழங்கப்பட்ட நிலையில் பெருந்தொகையை வசூலித்திருப்பது அனைவரையும் அதிசயப்பட வைத்துள்ளது.

இன்று தமிழின் முன்னணி நாயகியாக வலம் வருபவர் நயன்தாரா. சர்வதேச சஞ்சிகையான போர்ப்ஸ் இதழ் அவருக்கு பெரும் கௌரவம் ஒன்றை அளித்துள்ளது.

ஆனால், அந்தப் பத்திரிகையின் அட்டைப்படத்தில் நயன்தாராவின் ஸ்ரைலான புகைப்படம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதில் தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளில் நடிக்கும் சூப்பர் டூப்பர் நடிகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




தமிழ், தெலுங்கு, ஹிந்தி என நடித்து வரும் ரகுல் பிரீத் சிங் தற்போது தமிழில் இந்தியன்-2, அயலான் படங்களில் நடிக்கிறார்.

தனது பிறந்த நாளான கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி ஹிந்தி பட தயாரிப்பாளரும், நடிகருமான ஜாக்கி பாக்னானியை தான் காதலிப்பதை வெளிப்படையாக அறிவித்தார் ரகுல். அதேபோல் ஜாக்கியும் காதலை உறுதிப்படுத்தி ரகுலுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் இருவரும் அடுத்த ஆண்டு இருவரும் திருமணம் செய்துகொள்ளவுள்ளனர்.



# திரை விமர்சனம்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | உடன்பிறப்பே |
| இயக்கம் | : | இரா. சரவணன் |
| இசை | : | இமான் |
| நடிகர்கள் | : | ஜோதிகா, சசிகுமார், சமுத்திரக்கனி, சூரி |
| வெளியீடு | : | 14 ஒக்ரோபர் 2021 |

அண்ணன் - தங்கை பாசக் கதைதான் என்பது படத்தின் பெயரிலேயே புரிந்துவிடுகிறது. ஆனால், அண்ணன், தங்கை பாசத்தை இருவருமே பேசிக் கொள்ளவில்லை என்றாலும் அதை உணர்வுபூர்வமாக சொல்லியிருக்கிறார் இயக்குநர் இரா. சரவணன்.

கிராமத்தில் சசிகுமார், ஜோதிகா இருவரும் அண்ணன் தங்கை. ஜோதிகாவின் கணவர் சமுத்திரக்கனி ஆசிரியராக வருகிறார். அனைத்து சிக்கல்களையும் அடிதடி மூலமே தீர்த்துவிட முடியும் என்று திரியும் சசிகுமாரின் குணம் சமுத்திரகனிக்கு பிடிக்கவில்லை. இதை அவர் சொன்ன பிறகும் சசிகுமார் தன்னை மாற்றவில்லை. சசிகுமாரின் இந்தக் குணத்தால் சமுத்திரகனியின் பிள்ளை ஒன்று பலியெடுக்கப்படுகிறது. இதனால் சமுத்திரகனியும் ஜோதிகாவும் சசிகுமாரை விட்டு பிரிகின்றனர்.

தனது அண்ணனும், கணவனும் சேர மாட்டார்களா என ஏங்கித் தவிக்கிறார் ஜோதிகா. பிரிந்த இரண்டு குடும்பங்களும் ஒன்று சேர்ந்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இது ஜோதிகாவின் 50ஆவது படம். அதிமுக்கியத்துவமான காட்சி அவருக்குத்தான்.



உணர்வுபூர்வமான காட்சிகளில் மனதில் பதிகிறார். ஒரு பக்கம் அண்ணன் இன்னொரு பக்கம் கணவன் என விட்டுக்கொடுக்காமல் இருவரையும் சமன் பேணுகிறார்.

கிராமத்து இளைஞனாகவே வந்தவர், இந்தப் படத்தில் ஓர் இளைஞனுக்கு அப்பாவாக நடித்துள்ளார். ஆனாலும், அதிரடிக்கு குறைவில்லாத கதாபாத்திரம். தங்கை மீதான பாசத்தில் எல்லைகளைக் கடந்து நிற்கும் அதே தமிழ் திரையுலகின் அண்ணன்.

சட்டமே எல்லாம் என்பவராக சமுத்திரக்கனி, தனது கதாபாத்திரத்தில் அப்படியே பொருந்துகிறார். கிராமத்து நகைச்சுவை என்றால் அதற்கு சூரிதான் எனும் நிலையை இந்தப் படத்திலும் அவர் ஏமாற்றவில்லை.

படத்தில் மற்ற கதாபாத்திரங்களும் உண்டு. ஆனால், அனைவருமே ஒரு சில காட்சிகளில் வந்து போகிறார்கள். வில்லனின் காட்சிகள் மிகைப்படுத்தலாக உள்ளது.

இமான் இசையில் “அண்ணே...யாரண்ணே...” பாடல் ரசிக்க வைக்கிறது. படம் முழுவதும் பின்னணி இசை சலிப்பை தருகிறது. சில இசையில்லாமல் அமைதியாக இருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தஞ்சாவூர் மண்ணை - அதன் கிராமிய அழகை - திருவிழா கொண்டாட்டத்தை - பண்பாட்டு பினனணியை அப்படியே பதிவு செய்திருக்கிறார் ஒளிப்பதவிளார். ஆனால், வழக்கமான காட்சிகள் சில சலிப்பூட்டுகின்றன.

ஐயப்பன்




# ‘அப்பாக்களின் படை’ சென்னை சம்பியனானது எப்படி?

எப்போதெல்லாம், மரண அடி வாங்கி மண்கவ்வி விட்டதாக, சென்னை சுப்பர் கிங்ஸ்மீது விமர்சனங்கள் பாய்கிறதோ, அப்போதெல்லாம், முன்னிலும், அதீத சக்தி படைத்ததாக சென்னை அணி வீறு கொள்கிறது.

“முன்பைவிட வலிமையோடு திரும்பி வருவோம்” என கடந்த தொடரில் டோனி, சொன்னதைச் செய்து காட்டி, நான்காவது முறையாக சென்னையை வெற்றிக் கிண்ணத்தை ஏந்த வைத்துள்ளார்.

ஒன்பது முறை இறுதிப் போட்டிக்குள் நுழைந்த அணியாக, சென்னை வெறித்தனம் காட்ட, நுழைந்த இரு முறையுமே, கிண்ணத்தைத் தட்டித் தூக்கிய அணியென கொல்கத்தா நைற் ரைடர்ஸூம் வாளைச் சுழற்றியது. போட்டியின் சுவாரசியம் கூட்டிய, அனல் பறக்கும் தருணங்கள் இங்கே...

### எடுபடாத சுழல் சூத்திரம்!

அரபு நாடுகளில் நடந்த அத்தனை போட்டிகளிலுமே, சுழல் + மெதுவான ஆடுகளம் என்ற சூத்திரமே, கொல்கத்தாவின் தலைவர் இயன் மோர்கனுக்குக் கை கொடுத்திருந்தது. அதை நம்பியே இறுதிப் போட்டியிலும், அதே கூட்டணியைக் கொண்டு வந்திருந்தார். ஆனால், சென்னையின் படை பலம் முன்பாக, சுழல் மாயம் எடுபடாமல் போனது.

நரைன், வழக்கம் போல் இரண்டு விக்கெட்களோடு, வெறும் 24 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து ஆறுதல் அளித்திருந்தார். மற்ற இரு சுழல் பந்து வீச்சாளர்களின் ஓவர்களில், 10 ஓட்டங்களுக்கு அருகில் சென்றதுதான் கொல்கத்தா சரிவைச் சந்தித்த இடம்.

### களத்தடுப்பு தவறுகள்

“பெரிய போட்டிகளில், சின்னத் தவறுகளுக்கான விலை பெரியதாகவே இருக்கும்”, என்பது பாலபாடம். அத்தகைய தவறை ஆரம்பத்திலேயே செய்து சறுக்க ஆரம்பித்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்.

‘பவர்பிளே’க்கு உள்ளாகவே, களத்தடுப்பு தவறுகள், நேரடியாக பிடி வாய்ப்புகளைத் தவறவிட்டது, ஸ்டம்ப்பிங் தவறல் என எப்படியெல்லாம் களத்தடுப்பு செய்யக் கூடாது என்பதற்கான பயிற்சியில் ஈடுபட்டது கொல்கத்தா அணி. அதற்கான விலைதான், விக்கெட்களற்ற பவர்பிளே ஓவர்களுக்கு வழிவகுத்தது.

டு பிளசிஸூக்கு, தினேஷ் கார்த்திக் தவறவிட்ட ஸ்டம்ப்பிங்கின்போதே, கொல்கத்தா அணிக்கு வெற்றிக் கிண்ணம் கைகூடாது என்ற நிலைமை வந்துவிட்டது.

### மத்திய ஓவர்களில் ஆதிக்கம்!

எந்தவோர் அணியும், பவர்பிளே ஓவர்களிலும், இறுதி ஓவர்களிலும் ஓட்டங்களை வாரிக் குவிக்கும். பவர் பிளேவுக்கும் இறுதி ஓவர்களுக்கும் இடைப்பட்ட மத்திய ஓவர்களில், ஓட்டங்கள் பெரும்பாலும் வராது. அதுவும் கொல்கத்தா போன்ற ஒரு படைபலம் பொருந்திய சுழல் வீரர்களின் கூட்டணிக்கு எதிராக, ஓட்டங்களை எடுப்பது என்பது இமாலய இலக்கு. இந்தத் தொடரில் இரண்டாவது பாதி முழுமையிலும், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் பந்துவீச்சின்போது, ஏழாவது ஓவரிலிருந்து, பதினைந்தாவது ஓவர் வரை, 6. 19தான் அவர்களின் எக்கனமியே. ஆனால், சென்னை அந்த மத்திய ஓவர்களையும், குறிவைத்து அடித்தது. அந்த 9 ஓவர்களில், 81 ஓட்டங்களைக் குவித்து, கொல்கத்தாவைப் பார்த்து, “கிண்ணமும் கிடையாது, ஒன்றும் கிடையாது ஓடுங்கள்!” என்று சொல்லாமல் சொல்வதைப்போல சென்னையின் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் இருந்தது.

### இரண்டாவது பாதி போட்டி

பெரிதாக ஆடாத டு பிளசிஸ், பஞ்சாப் அணிக்கு எதிராக மட்டும் 76 ஓட்டங்களை எடுத்து 28 என்ற சராசரியை மட்டுமே வைத்திருந்தார். சென்னை போன்ற போன்ற அணியில், விலகல் (knock out) போட்டிகளில் எப்போதும் ஒரு வீரர் சம்பியன் வீரராக உருவெடுப்பார். அவரே கிண்ணம் வெல்லவும் காரணமாக இருப்பார். 2018இல் ஷேன் வற்சன் சன் ரைசர்ஸைப் பந்தாடிய வேலையை, நேற்று டு பிளசிஸ் கையிலெடுத்தார். கொல்கத்தா பந்துவீச்சாளர்களை உண்டு இல்லை எனச் செய்து விட்டார். குறிப்பாக, தான் சந்தித்த பெர்குசனின் 17 பந்துகளில், கிட்டத்தட்ட 40 ஓட்டங்களை விளாசி மொத்தம் 86 ஓட்டங்களை குவித்தார் டு பிளசிஸ்.

கொல்கத்தா நைற் ரைடர்ஸூக்கு எதிராக, இந்த சீசனில் மட்டும் 224 ஓட்டங்களை, டு பிளசிஸ் எடுத் திருக்கிறார். முதல் ஓவரிலிருந்து, இறுதிப் பந்து வரை, அவர் தாக்குப் பிடித்தது மட்டுமின்றி, தடம் பதித்ததே, சென்னை அணிக்கு பெரும் பலமாக அமைந்தது. அவருக்கும், ருதுராஜ் கெய்க்வாட்டுக்கும் இடையே யான ஒரேஞ்ச் தொப்பிக்கான ஓட்டத்தில், இரண்டே ஓட்டங்கள் வித்தியாசத்தில், கெய்க்வாட், ஒரேஞ்ச் தொப்பியைக் கைப்பற்றியிருந்தாலும், இந்தத் தொடர் முழுவதுமே, இவர்களின் தோள்கள்தான், சென்னையின் பல்லக்கைத் தூக்கிச் சுமந்ததன.



### மூன்று 50+ இணைப்பாட்டங்கள்!

தவறவிடப்படாத பிடியெடுப்புகள், பந்துவீச்சின் போது, வெற்றியை நோக்கி, ஓர் அணியை உந்தித் தள்ளுமெனில், அதற்கு இணையாக முக்கியத்துவம் வாய்ந்தது, துடுப்பாட்ட இணைப்பாட்டம். சென்னையின் முதல் 4 வீரர்களுக்கு இடையேயான, மூன்று 50+ இணைப்பாட்டங்களும், போட்டி, சென்னையின் பிடியிலிருந்து நழுவாமல் பார்த்துக் கொண்டன. நீண்ட நெடியதாக இருப்பினும், இந்தத் தொடரில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மட்டுமே, சென்னை அணியின் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான ஓட்டங்களை அடித்துள்ளனர். நிலையற்றதாகவே மற்றவர்கள் ஆட்டம் பார்க்கப்பட்டு வந்த நிலையில், முக்கிய போட்டிகளில், பிரதான துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பாக ஆடியுள்ளனர்.

### கொல்கத்தா அணி!

இறுதிப் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தாவின் சந்திக்கிறது என்றதுமே, 2012 நினைவலைகள் இரண்டு பக்கமும் எழுந்திருந்தன. “சரித்திரம் திரும்பும்” என கொல்கத்தாவின் ரசிகர்களும், “வாங்கியதை சென்னை அணிக்கு திரும்பித் தந்து பழிதீர்க்கும்” என அவர்களின் தரப்பும், வார்த்தைப் போர்களில் முட்டி மோதிக் கொண்டிருக்க, இப்போட்டியில் பல நிகழ்வுகள் பழையதை, மறுபடியும் ஓட்டிப் பார்க்க வைத்தன. 190+ ஓட்டங்களை இதற்கு முன்னதாக, இரண்டு இறுதியாட்டங்களிலும் துரத்தியடைத்தே கிண்ணத்தை கொல்கத்தா வென்றது. 2012இல், முதல் இனிங்ஸின் இறுதிப் பந்து விக்கெட் காவு வாங்கியது என பல தகவல்கள் சற்றே சென்னை ரசிகர்களுக்கு, ‘தேஜாவு’ வரவழைத்து, கிலியூட்டிக் கொண்டே இருந்தன.

### ‘டெத்’ பந்து சர்ச்சை

கொல்கத்தாவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆடிக் கொண்டிருந்தார்கள். விக்கெட்டே விழாதா என எண்ணித் தவித்தபோது, பத்தாவது ஓவரில், ஜடேஜா வீசிய பந்தை, கில் அடிக்க, அது ‘டீப் மிட் விக்கெட்’டில், ராயுடுவிடம் தஞ்சமடைந்தது. விக்கெட் வீழ்ச்சியைக் கொண்டாடிய சென்னையின் ரசிகர்களுக்கு, ‘டெத்’ பந்து என்ற அறிவிப்பு, காயத்தில், உப்புத் தாளைக் கொண்டு தேய்த்த உணர்வைத் தந்தது. காரணம், கீழ் நோக்கிப் பாய்ந்த பந்து, தரையை அடையும் முன்பு, உயரத்தில் இருந்த கமெராவின் வயரைத் தொட்டு இடறி வந்திருந்ததுதான். பத்து ஓவர்கள் விக்கெட் இழப்பின்றி, பத்திரமாக கொல்கத்தா கடந்திருந்ததும், ஆரம்ப இணைப்பாட்டத்தை முறிக்க முடியாமல் போனதும், சென்னை அணிக்கு சேதாரத்தைத் தரும் எனற பயத்தைக் கிளப்பியது.

### இரட்டைத் தாக்குதல்!

இரட்டைத் தாக்குதலும், தாகூருக்குமான இணைபிரியாக் காதல் கதை பலமுறை படிக்கப்பட்டதுதான். இப்போட்டியிலும், அவரின் தாக்குதல்தான், கொல்கத்தாவுக்கு இடிபாடுகளுக்குள் இடறி அமர்வதை உறுதி செய்தது. வீசவந்த இரண்டாவது ஓவரிலேயே, இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தி, போட்டியை சென்னையின் பக்கமாக, அவர்தான் நாற்காலி இட்டு அமர வைத்திருந்தார். இருபது - 20 உலகக் கிண்ணத்துக்குள் நுழைந்திருக்கும், ஷர்துல் தாகூர், அதற்கான நியாயத்தைக் கற்பித்திருந்தார்.

### நடுவரிசையின் இழப்பு

இந்தத் தொடரில் தொடக்கத்தில் இருந்தே, கொல்கத்தாவின் நடுவரிசை பலவீனம் தெரிந்த கதைதான். அரபு மண்ணில், மிகப் பெரிய இலக்கை அவர்கள் துரத்த வேண்டிய அவசியமின்றி, அவர்களின் பந்துவீச்சாளர்கள் பெரும்பாலான போட்டிகளில், எதிரணியை குறைவான ஓட்டத்துக்குள் சுருட்டி இருந்தனர். பெரும்பாலும், 160இற்கு அதிகமான ஓட்டங்களை அவர்கள் துரத்தியடிக்குமாறு சூழல்கள் உருவாகவில்லை. அத்தகைய பழக்கம் இல்லாதது. இந்தப் பெரிய மேடையில், நன்றாகவே வெளிப்பட்டது. முதல் பத்து ஓவர்களில், விக்கெட் இழப்பின்றி நகர்ந்திருக்க, அடுத்த ஐந்து ஓவர்களில், வெகுண்டெழுந்த சென்னையின் பந்துவீச்சில், ஆறு விக்கெட்களை இழந்து, அங்கேயே தனது வெற்றிக் கிண்ணக் கனவை கலைத்துக் கொண்டது கொல்கத்தா.

### திரிபாதி காயம்!

களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த போதே, காயத்தால் வெளியேறியிருந்த திரிபாதி, எட்டாவது வீரராகத்தான், கொல்கத்தாவுக்காகக் களமிறங்கி இருந்தார். திடீரென வீறு கொண்டு, 2012 பிஸ்லாவின் இனிங்ஸை இவர் ஆடிக் காட்டலாம் என்றெல்லாம் கருத்துக்கள் உலா வர, திரிபாதியின் காயமும், கொல்கத்தாவுக்குப் பின்னடைவானது.

லீக் போட்டிகளில், வெற்றி யாரை வேண்டுமெனினும் தொற்றிக் கொள்ளலாம், ஆனால், அழுத்தம் நிறைந்த போட்டிகளில் சென்னையின் ஆட்டம் எப்போதும் தனி ரகம்தான் என மறுபடியும் ஒருமுறை நிரூபணம் ஆகியுள்ளது.

வீழ்ந்த இடத்திலேயே எழுந்திருக்கிறது சென்னை. அதுவும் மூன்று தசாப்தங்களிலும் (2010, 2018, 2021) சென்னை சுப்பர் கிங்ஸை சம்பியனாக்கி இருபது - 20 கிரிக்கெட்டின் பேரரசனாக மகுடம் சூடியிருக்கிறார் மகேந்திர சிங் டோனி!

நன்றி : விகடன்

# கோவிட் தொற்றுக்கு பின்னரான ஆரோக்கிய வாழ்வு

வைத்தியர். செ. போல்ரன்

கோவிட் தொற்றில் புதிதாக தொற்றுக்குள்ளாகும் எண்ணிக்கையும், தொற்றுக்குள்ளாகி அதனால் இறக்கும் இறப்பு விகிதமும் கணிசமானளவு குறைந்துள்ள இன்றைய நிலையில் இந்த கோவிட்  தொற்றுக்குப்பின்னரான உடல் உள பாதிப்பும் எமது ஆரோக்கிய நிலையும் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறோம் சிலர் பல வேறுபட்ட வழிகளில் தேடிக்கொண்டிருக்கிறோம்.

அந்த சிந்தனையைத் தழுவியதாக எமது தமிழ் மருத்துவத்தின் அடிப்படையிலான நடைமுறைகளைப் பின்பற்றி, உடலைத் தேற்றியும், மன நிலையை மாற்றும் பயிற்சிகளை மேற்கொள்ளவது இன்றியமையாதவொன்றாகும். உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டியும், கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட பகுதியை சீர்செய்து, காயமாகிய உடலை கற்பமாக மாற்றும் “காயகற்ப” நடைமுறைகளைப்பின்பற்ற வேண்டும். மனநிலையைச் சரிசெய்து உளநலத்தில் கவனம் செலுத்தி உடல், உள ஆரோக்கியத்தைப் பேணவேண்டும். அந்த வகையில் கோவிட் தொற்றுக்குப்பின்னராக உடலையும், மனதையும் எவ்வாறு ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளல் என்பது பற்றி பார்ப்போம்.

கோவிட் தொற்றுக்குப்பின்னரான குறிகுணங்களாக உலகளாவிய ஆராய்ச்சி முடிவுகளில் படி பட்டியல்படுத்தப்பட்டவை பின்வருமாறு:

**1.**உடற்சோர்வு, **2.** மூச்சுக்கஷ்டம், **3.** நெஞ்சுவலி, **4.** அதிகரித்த இதயத்துடிப்பு, **5.** நித்திரையின்மை, **6.** இருமல், **7.** தலைவலி, **8.** காய்ச்சல், **9.** உடல் வலி, **10.** மூட்டுக்களில் வலி, **11.** தசைவலி, **12.** மணமின்மை, **13.** ஏதோ நோய்வாய்பட்டநிலை, **14.** ஞாபக மறதி, **15.** காதிரைச்சல், **16.** வித்தியாசமான தொடு உணர்வு, **17.** விடயங்களைத் தொடர்பு படுத்திப் பார்க்க முடியாமை, **18.** அதிகரித்த குருதியமுக்கம் என்பவை தற்போதுவரைக்கும் பட்டியல்படுத்தப் பட்டுள்ளது.

இவற்றில் ஒன்றோ அல்லது பலவோ கோவிட் தொற்று ஏற்பட்டவர்களுக்கு காணப்படும். அதை விட இதில் குறிப்பிடப்பட்டதை விட புதிதாக ஏதாவது குறிகுணங்களும் காணப்படலாம். ஏனெனில், கோவிட் தொடர்பான ஆய்வுகள் ஒவ்வொருநாளும் புதிது புதிதாகவே வந்தவண்ணம் உள்ளன. இருப்பினும் இதில் பட்டியல்படுத்தப்பட்டவை உலகளவில்  பெரும்பாலானோருக்கு ஏற்பட்ட குறிகுணங்களாகும்.

இதை நாம் உடல்ரீதியான, மன ரீதியான குறிகுணங்கள் என்று பாகுபடுத்தி, அவற்றிற்கு, மூலிகைப் பிரயோகம், சித்தமருந்துகள், உணவுப்பழக்கம், யோகாப்பயிற்சிகள், மற்றும் மனநலப்பயிற்சிகள் என்ற அடிப்படையில் தீர்வுமுறைகளை அறியவுள்ளோம்.

மேற்குறிப்பிட்ட குறிகுணங்களுக்கு ஏற்றாற்போல், அதோடு பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டவும், உடற்தேற்றியாகவுமுள்ள மூலிகைகளையும் அவற்றினால் செய்யப்பட்ட சித்த மருந்துகளையும் பயன்படுத்துவது மிகப்பொருத்தமானதாகும். அதில் அமுக்கரா, நெல்லிக்காய், சீந் தில், மஞ்சள், நிலவேம்பு போன்றவற்றில் தயாரிக்கப்பட்ட மருந்துகளையும், தூதுவளை, நெல்லிக் காய், இஞ்சி, சுக்கு, கடுக்காய், வில்வம், சீந்தில், கீழாநெல்லி, துளசி போன்ற கற்ப மூலிகைகளை “காயகற்பமூலிகை” ஆகப்பயன்படுத்திக் கொள்ளலாம். கற்ப மூலிகைகளாகப் பயன்படுத்தும் போது அவற்றை 48 நாட்கள் தொடர்ச்சியாகப்பயன்படுத்த வேண்டும்.

தினமும் காலை இஞ்சியும், மதியம் சுக்கும், இரவில் கடுக்காய்த்தோலையும் தேநீராகப் பயன்படுத்துவது சித்தர்களின் வழக்கம். மேலும், தூதுவளை சம்பல், மஞ்சள் உருண்டை, கீழா நெல்லி கற்கம், சீந்தில் தண்டுக்குடிநீர் என்பனவற்றை 48 நாட்களுக்கு எடுத்துக்கொள்ளல்.

சித்த மருந்துகளாகப்பயன்படுத்தக்கூடியவற்றை பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவற்றை தெரிந்து கொள்வதற்காகவே அன்றி சுயமான மருந்துப் பாவனைக்காக அல்ல. எந்த மருந்தாயினும், அந்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவரிடம் மருத்துவ ஆலோசனை பெற்றே மருந்துகளை உட்கொள்ளவும். அமுக்கரா சூரணம், அமுக்கரா மாத்திரை, அமுக்கரா இலேகியம், நெல்லிக்காய் இலேகியம், திரிபலா சூரணம், திரிபலா மாத்திரை, சீந்தில் மாத்திரை, திரிகடுகு சூரணம், மருதம் பட்டைக்குடிநீர், மஞ்சள் கற்கம், சித்த ஜீவாமிர்தம், தூதுவளை இலேகியம், கண்டங்கத்தரி இலேகியம், வில்வாதி இலேகியம் மற்றும் நிலவேம்புக் குடிநீர் போன்ற பல சித்த மருந்துகள் உள்ளன இவற்றை தகுதியான சித்த மருத்துவரின் ஆலோசனையுடன் சரியான அளவில், சரியான வேளையில், குறிப்பிட்ட நாட்களுக்கு எடுத்துக்கொள்வது நன்மை பயக்கும்.

இவற்றுடன் உடல், உள ஆரோக்கியத்தில் யோகாப்பயிற்சிகள் முக்கியமானவையாகும். யோகாசனங்கள், இவை உடல் தொகுதிகளை வலுப்படுத்துவதுடன், மனதையும் ஒருநிலைப்படுத்தும். நின்று செய்யும் ஆசனங்களான: தடாசனம், அர்த்தகட்டி சக்கராசனம், பாதஹஸ்தாசனம், வீரபத்ராசனம், ஏகபாதாசனம் போன்றவையும், இருந்து செய்யக் கூடிய ஆசனங்களான: தண்டாசனம், வஜ்ராசனம், சித்தாசனம், பத்மாசனம், பச்சிமோத்தாசனம், ஜானு சிரசாசனம், உஷ்டாசனம் போன்றவையும், நிமிர்ந்து படித்திருந்து செய்யக்கூடிய ஆசனங்களான: பவன முத்தாசனம், சேதுபந்தாசனம், சக்கராசனம், கலாசனம், நவாசனம், விபரிதகரணி, சர்வாங்காசனம் போன்றவையும், குப்புற படித்திருந்து செய்யக்கூடிய ஆசனங்களான: சர்ப்பாசனம், புஜங்காசனம், சலாபசனம், தனுராசனம், மயூராசனம் போன்றவற்றுள் நின்று செய்யும் ஆசனங்களில், இருந்து செய்யக்கூடிய ஆசனங்களில், நிமிர்ந்து படித்திருந்து செய்யக்கூடிய ஆசனங்களில், குப்புற படித்திருந்து செய்யக்கூடிய ஆசனங்களில் இவ்விரண்டேனும் முறைப்படியாக சரியாகச்செய்யவேண்டும். ஒவ்வொரு ஆசனத்திற்கும் தனித்தனியே செய்யும் முறை, செய்யக்கூடியவர்கள், செய்யக்கூடாதவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் படி சரியான குருவிடம் கற்றுக் கொண்டு செய்வது மிகுந்த பலனைத்தரும். இவற்றைவிட தினமும் 5 முதல் 11 தடவைகள் சூரிய வணக்கம் (Sun Salutation) செய்வது மிகச்சிறப்பானது.

ஆசனங்களை அறிந்துகொண்ட நாம், இனி மூச்சுப்பயிற்சி பற்றி தெரிந்து கொள்வோம். கோவிட் தொற்று சுவாசப்பாதையினுடாகவே தொற்றுக்குள்ளாகி, சுவாசத் தொகுதியையே பாதித்து, மூச்சின் சாதாரண நிலையை மாற்றியமைக்கின்றது. எனவே கோவிட்டுக்குப் பின்னராக சுவாசத்தொகுதியை வலுவூட்டவேண்டியது அத்தியாவசியமானதாகும். சுவாசத்தொகுதியை வலுவூட்டுவதற்கு யோகாசனங்களுடன், மூச்சுப் பயிற்சியும் மிக முக்கியமானதாகும். மூச்சுப்பயிற்சியை செய்யும் போது முதுகெலும்பு நேராக இருக்கும் வண்ணம் அமர்ந்த நிலையில் உடலை இலகுவாக வைத்துக்கொண்டு கண்களை மூடியவாறு, மூச்சில் கவனத்தைச் செலுத்தி, மனதை ஒருநிலைப் படுத்தி உள், வெளி மூச்சுக்களை இழுத்து விட வேண்டும். சில குறிப்பிட்ட மூச்சுப்பயிற்சிகள் கோவிட்டுக்குப்பின்னராக சுவாசத்தொகுதியை வலுவூட்டக் கூடியவை அவையாவன: பஸ்திரிக்கா, நாடிசுத்தி, பிரம்மரி, கபாலபதி போன்ற சாதாரண இலகுவான மூச்சுப்பயிற்சிகளை சரியானமுறையில் குருவிடம் கற்று பின்னர் தினமும் செய்துவர வேண்டும்.

அடுத்து முக்கியமாக, மன ஆரோக்கியத்திற்காக தினமும் நல்ல எண்ணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். முதலில் உங்கள் எண்ணத்தில்: “எனக்கு கோவிட் தொற்று ஏற்பட்டிருந்தாலும் இப்போது நான் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறேன், எனது உடலும், மனமும் ஆரோக்கியமாகவும், நோய் எதிர்ப்பாற்றல் பெற்று இருக்கின்றது” என்ற ஆழ்மனதின் எண்ணத்தை அடிக்கடி சிந்தித்தவாறு இருக்கவேண்டும். இதை உங்கள் சங்கல்பமாகக் கொள்ளவேண்டும். ஆன்மீக நாட்டத்தில் மனதை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். தியானம் போன்றவற்றின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவையற்ற அல்லது வெறுப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்களையோ அல்லது நிகழ்ச்சிகளையோ எண்ணக்கூடாது. மனதிற்குப்பிடித்த பொழுதுபோக்கை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக மனநிலைப் பிறழ்வுக்குரிய தீவிரத்தன்மை காணப்படுமாயின் கண்டிப்பாக ஒரு மனநல மருத்துவரை நாடுவது நல்லது. இவ்வாறாக எப்போதும் மனதை அமைதியாகவும், புத்துணர்ச்சியுடனும், இளமையாகவும், வெறுமையாகவும் வைத்திருப்பது நல்ல ஆரோக்கியத்தைத்தரும். இது கோவிட்டுக்குப்பின்னரான நிலையில் மட்டுமல்லாமல் எப்போதும் இவ்வாறு வைத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

மேலும், உணவுப்பழக்கவழக்கம் என்பது மிக முக்கியமானவொன்றாகும். உணவில் சரி சமவிகித உணவும், உணவு உட்கொள்ளும் காலநேரமும், உணவுத் தெரிவும் மிக முக்கியமான உணவுப்பழக்கமாகும் இதை வழக்கமாக்கிக்கொள்ளவேண்டும். கோவிட் தொற்றுக்குப்பின்னர் புரதச்சத்து கூடிய உணவைத் தெரிவு செய்ய வேண்டும். கிழமைக்கொரு தடவையாவது கட்டாயமாக “இரசம்” மதிய உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். எப்போதும் இளஞ்சூடாகவே உணவு உட்கொள்ள வேண்டும். மதிய நேர உணவில் பச்சை இலைகளின் சம்பல் கண்டிப்பாகச் சேர்துக்கொள்ள வேண்டும். சாப்பாட்டிற்கு அரை மணி நேரத்தின் பின்னரே பழங்களை உண்ணவேண்டும். வெள்ளைச்சீனி, அதிக உப்பு, கடையில் கிடைக்கும் துரித உணவுகள், அடைக்கப்பட்ட உணவுகள் பயன்படுத்துவதை கூடியளவு தவிர்க்கவும்.

எனவே, கோவிட் தொற்றுக்குப் பின்னரான வகைப்படுத்தப்பட்டுள்ள உடல் ரீதியான, மன ரீதியான  குறிகுணங்களுக்கு, மூலிகைப்பிரயோகம், சித்தமருந்துகள், உணவுப்பழக்கம், யோகாப் பயிற்சிகள், மற்றும் மனநலப்பயிற்சிகள் என்ற அடிப்படையில் தீர்வுமுறைகளைப் பற்றி வாசித்தறிந்தீர்கள். தனியே வாசித்துவிட்டு போய்விடாது, இதை வாழ்க்கையில் கொண்டு, ஆரோக்கியமாக வாழ வாழ்த்துக்கள்.



# உருளும் பந்து

தேன்மொழி சபா



உருட்டி விளையாடும் பந்தை தாய் தூக்கிக் கொடுக்க, துள்ளிக்குதித்து சந்தோசத்தில் பொங்கியெழுந்து பாயும் குழந்தையின் அழகோ அழகு. அதனை புன்முறுவலோடு பார்த்து இரசித்த வண்ணம் ஸோபாவில் இருந்த பார்வதியின் கணவருக்கு மனதில் எல்லையற்ற எண்ணங்கள் தோன்றின "எங்களையும் அம்மா இப்படித்தானே கொஞ்சிக் கொஞ்சி வளர்த்திருப்பா, அதைப் போல இன்று நாங்கள் எங்கட பிள்ளைகளோட விளையாடுகிறோம்" என அவனின் எண்ண அலைகள் வேகமாகப் பின் தொடர்ந்தன.

ஆறாம் தரம் படிக்கும்போது அக்காவும் தம்பியும் முற்றத்து வேப்பமரத்தில் கட்டியிருந்த ஊஞ்சலில் துள்ளித்துள்ளி ஆடி மகிழ்ந்தனர். அவர்களுக்கிடையே ஒரு போட்டி அதாவது கால்களை நிலத்தில் உன்னி ஆடும்போது யார் வேகமாக, உயரமாய் ஆடுகிறது என்று, நான் அப்ப சின்னப் பொடியன் ஊஞ்சலில் இருந்தால் எனக்கு கால் எட்டாது, எனக்கு அது தெரியும், ஆனாலும் போட்டியே, "போட்டி என்று வந்துவிட்டால் அஞ்சாத சிங்கம்" அதனால் துள்ளித் துள்ளி ஆடினேன். அப்போது சறுக்கி முகங்குப்புற விழுந்து விட்டன், விழுந்ததுதான் தெரியும். கண் விழித்துப் பார்க்கும்போது ஆஸ்பத்திரியில் ஐ.சி.யூ வில, எனக்கருகில் அம்மா அழுதவண்ணம் இருந்தா.

அசையமுடியாமல் ஒரே வலியாய் இருந்தது எனக்கு. "அம்மா" என மெதுவாகக் கூப்பிட முயற்சி செய்தன்.ஆனால் வாய் அசைக்க முடியவில்லை முன் பல் இரண் டும் உடைந்தது மட்டுமல்ல கீழ் உதட்டிலையும் குத்திப் போட்டுது, அத்தோட மூக்கும் நிலத்தில அடிபட்டு இரத்தம் ஓடிவிட்டுது போல, அதுவும் ஒரேவலி. அத்தோட விட்டதா, என்ர கஷ்ர காலம் விழும்போது கையை ஊண்டிப் போட்டன் போல, ஒருகையில மணிக்கட்டுக்கு பண்டேச் மற்றக்கையில முழங்கையில இருந்து உள்ளங்கை வரை, விரல்கள் அசைக்க முடியாதபடி கட்டு. என்னைப் பார்க்க எனக்கே வேதனையாக இருந்தது. "அம்மா" எதுவும் பேசாது கண்ணீர் விட்டவாறு மௌனமாக எனது தலையைத் தடவிக் கொண்டு பக்கத்தில் இருந்தா. நெற்றி நிறைய திருநீறு பூசிச் சின்னதாக ஒரு சந்தனப்பொட்டும் வைத்திருந்தா. நெற்றிமுடி பஞ்சு போன்று பறக்க, மெல்லிய வெண்மை கலந்த புடவையில அமைதியே உருவமாக தேவதை போல காட்சி அளித்தா,. நான் விட்ட தவறு, என்னை இந்த நிலைமைக்கு உள்ளாக்கியது. ஆனால், அம்மா என்ன தவறு செய்து போட்டு, கண்ணீர் வடிக்கிறா, அதுக்கு காரணம் நான்தானே, அம்மாவுக்கு எந்தளவு கஷ்டத்தை கொடுத்துப் போட்டன். என்ற குற்ற உணர்வு என்னை உறுத்த, எனது கண்களி லும் நீர் வழிந்து கன்னத்தை ஈரமாக்கியது. "அம்மா என்னை மன்னிச்சுவிடு, இனிமேல் இப்படியான வேலைக்கெல்லாம் போகமாட்டன், எனச் சொல்லி அவாவைக் கட்டிப்பிடித்து பெலத்த சத்தமாக அழ வேணும் போல இருந்தது. என்னால் முடியேலை. அம்மாவின் தோற்றம் எனக்கு வேதனையை கொடுக்க அவாவிடம் கண்களால் மன்னிப்பு கேட்டேன் .

அப்போது சிறு சலசப்பு. வைத்தியரும், தாதியும் வந்தனர். "என்ன அனுவதனா, ஊஞ்சல் ஆடுவோமா? என ஒரு பாசத்தோடு மெதுவாகக் கேட்டவண்ணம் எனக்கருகில் வந்து, எனது வலக்கையைத் தூக்கினார் "ஆ" என்று நான் அலற, கையை விட்டு விட்டு தாதி யிடம் ஏதோ கூறினார். டொக்டர் வந்ததும் அம்மா கொஞ்சம் விலகி நின்றா, அவாவின் அருகில் சென்று, என்னம்மா நீங்கள்....,? இப்படி கண்கலங்கலாமா? பெரிய ஆபத்தொன்றிலை இருந்து உங்கட மகன் தப்பி விட்டான், இனியெல்லாம் சுகமாகிவிடும், கண்ணீரைத் துடையுங்க, உங்களைப் பார்த்து அவன் வேதனைப்பட காயங்கள் ஆறாது அம்மா, நீங்கள் தைரியமாக இருக்க வேணும், நெற்றி நிலத்தில விழுந்த வேகத்துக்கு அடிபட்டிருந்தால் கண்பார்வை இல்லாமல் போயிருக்கும், அல்லது உயிர் கூடப் போயிருக்கலாம். இந்தளவில் உங்கட மகன் இருக்கிறான் என்றால் அது உங்கட அதிர்ஷ்டம் எண்டுதான் சொல்ல வேணும்" எனக்கூற, அம்மா கண்ணீருடன் அவரைப் பார்த்துக் கும்பிட, கையை பிடித்துக் கீழ விட்டவாறு, மற்றவர்களிடம் தனது பார்வையை செலுத்தினார். அம்மா எனக்கருகில் வந்து அமர்ந்தா.

நாட்கள் நகர்ந்தன. நான் உயர்தரம் படிக்கத் தொடங்கிவிட்டன், அம்மா தனது ஓய்வான நேரங்களில் உடுப்புத் தைத்து கொடுத்தும், ஓடருக்கு பலகாரங்கள் செய்து கொடுத்தும் எங்கள் இருவரதும் படிப்பிற்கான செலவுகளையும் சமாளித்தா, அக்கா பாடசாலை போக ஓரளவு நிம்மதி கிடைத்தது. நானும் சோதினை எடுத்துவிட்டு வீட்டிலை சும்மா இருக்காமல் ஒரு ரியூட்டறியில் ரியூசன் கொடுக்கத் தொடங்க, இன்னும் அம்மாவுக்கு ஆறுதலாக இருந்தது,

மகாபாரதத்தில கணவன் இறந்த பின்பு, பாண்டவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாகவும், பெரிய வர்களுக்கு மரியாதை கொடுத்து அவர்களின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து, கீழ்ப்படிவுள்ள நல்ல பண்புடையவர்களாக வளர்த்த பெருமை, பஞ்ச பான்டவர்களின் தாயான குந்திதேவிக்கு தான் உரியது. அதுமட்டுமா பிள்ளைகளின் இயல்புக்கு ஏற்ப அறிவுரைகள் கூறி, தலைமகனுக்குரிய பொறுப்புகளை புகட்டி, எந்த ஒரு சந்தற்பத்திலும் ஐவரும் ஒற்றுமை யாக, ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காது. தமையனின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப நடந்து வாழ்க்கை யில் பெருமைப்பட வைத்த புண்ணியவதி.

அது போலத்தான் அம்மாவும். தனியாளாய் எங்கள் இருவரையும் நற்பண்புடைய ஒழுக்கம் உள்ளவர்களாக வளர்த்துள்ளா. அதுமட்டுமல்ல எமது எதிர்காலத்துக் காக தன் வாழ்க்கையைத் தியாகம் செய்திருக்கிறா, அப்பா இறக்கும்போது அவாவுக்கு வயது இருபத் தெட்டு, நான் பிறந்து ஒன்பது மாதம், அக்காவுக்கு இரண்டரை வயசு . மாமா, பெரியம்மா எல்லாரும் மறுமணம் முடிக்கச் சொல்லி வற்புறுத்தியதால் சொந்த பந்தங்களை எல்லாம் உதறித்தள்ளினவா. சொந்த பந்தத்தை மட்டுமா உதறித்தள்ளினவா. தனது உணர்வை; அழகை, ஆசாபாசங்களையும் சேர்த்தல்லவா உதறித்தள்ளினவா.

என்னையும் அக்காவையும் அழைத்துக் கொண்டு உறவினர்களின் வாசமில்லாமல் வாழ்வதற்காக மாகாணத்தை விட்டு மாகாணம் சென்று ஒரு பிள்ளை யார் கோயிலில் இருந்தபோது, அந்த ஆலயத்தில் வேலை செய்த பெண்மணி, அக்காவின் அழுகையைப் பார்த்து பிரசாதங்களை கொடுத்து ஆறுதல் அளித்தார். அம்மா தனது நிலையை அவாவிடம் கூறி தங்குவதற்கு இடம் கேட்க, தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அடைக்கலம் கொடுத்ததால, எங்களால் உயிரோடு இருக்க முடிந்தது.

அம்மா ஓரளவு படித்திருந்ததால, வீட்டில பிள்ளை யளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தும். வேலைக்குச் செல்பவர்களின் பிள்ளைகளை பராமரித்தும் தனது வாழ்க்கையை மிகவும் எளிமையாக ஓட்டினா. அவாவின் நடத்தையில் செயலில் ஒரு தூய்மை இருந் தது. அதனால், அந்த ஊரில் உள்ளவர்கள், அன்போடு "அகதிஅக்கா" என்று அழைத்தனர். அந்த ஊர்மக்களின் அன்பின் காரணத்தினால் தான் நாங்களும் படித்து இந்த நிலைமைக்கு வரமுடிந்தது.

உயர்தர முடிவு வந்தபோது அம்மா அடைந்த சந்தோசத்திற்கு அளவேயில்லை. எனக்கு, பல்கலைக் கழகம் போக விருப்பமில்லை. ஆனால் அம்மாவின் விருப்பம், நான் ஒரு "இஞ்ஜினியராக" வரவேணும் என்பது.. அவாவுக்காகத்தான் படித்தேன், என்ர பட்ட மளிப்பு விழாவின் போது தான், அவாவின் உண்மை யான அழகை என்னால் பார்க்க முடிந்தது; அவாவின் ஆசையை நிறைவேற்றிய திருப்தி எனக்கு.


காலங்கள் உருண்டோடின அக்காவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அப்போது அம்மா தனக்கு இரண்டு சகோதரங்கள் இருப்பதாகவும் அவர்கள்தான் அக்கா வின் திருமணத்தை முன்னின்று நடத்த வேண்டும் எனவும் ஆசைப்பட்டா. நாங்களும் அம்மாவின் விருப்பப்படி எல்லாம் நடக்கட்டும் என்று விட்டு விட்டோம். அக்காவின் திருமணத்திற்கு அழைப்பதற் காக சொந்த ஊருக்குச் சென்றோம். அங்கு போன பின் தான் அவர்கள் எவ்வளவு வசதியாக வாழ்கின்றார் கள் என்பது நமக்குப் புரிந்தது. இந்த இரு சகோதரங் களும் இருக்கும் போது அம்மா ஒருவரது உதவியுமில் லாது தனியாளாக நின்று கஷ்ரப்பட்டிருக்கிறாவே, இவர்கள் மனம் வைத்திருந்தால் இந்த வீட்டில அறையில எங்களையும் இருக்க விட்டிருக்கலாம், என்ற எண்ணம் என்னுள் பரவ, அவர்கள் மீது, ஆத்திரமும் வெறுப்பும் மேலோங்கியது.

பெரியம்மாவின் வீட்டிற்குள் செல்ல விருப்ப மில்லா மல் வாசல்படியில் நின்றேன், அதே நேரம், அக்கா எனது கையைக் கிள்ளினா. "வாடா, உள்ளுக்க, எங்க ளால் அம்மாவுக்கு பெருமை கிடைக்க வேணும், வாடா இதெல்லாம் வெளிநாட்டுக் காசடா, வா", எனக் கையைபிடித்து இழுத்துச் சென்றாள். எங்களைக் கண்ட பெரியம்மா "என்ன யமுனா, அனு, வாங்கோ, எங்கட கண்ணில காட்டாமலே உங்களை வளர்த்துப் போட் டாள், இப்பவாதல் அவளுக்கு என்ர நினைப்பு வந்துதே, அதுவே சந்தோசம் என அக்காவை பிடித்து அழத் தொடங்கினா.. அவா அழ, அம்மாவும் அழுதா. அம்மா அழுகின்ற கோலத்தை என்னால் சகிக்க முடியாமல் போக, நான் அம்மாவின்.

(16 ஆம் பக்கம் பார்க்க....)

# தேவாலயத்தின் உள்ளே வைத்து பிரிட்டிஷ் எம்.பி வெட்டிக்கொலை!

## சோமாலிய இளைஞரின் கொடூரம்




**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

பிரிட்டனில் ஆளும் பழமைவாதக் கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் சேர் டேவிற் அமெஸ் (David Amess) கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் மெதடிஸ்த தேவாலயம் ஒன்றினுள் வைத்து அவரைக் கத்தியால் பல முறை குத்தினார் என்று கூறப்படுகின்ற 24 வயதுடைய சோமாலியா நாட்டு இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

எஸ்செக்ஸில் (Essex) அமைந்துள்ள பெல்பெயார் மெதடிஸ்த தேவாலயத்தில் (Belfairs Methodist Church) டேவிற் அமெஸ் கோரமாக குத்திக் கொல்லப்பட்ட காட்சியை நேரில் கண்டவர்கள் அதிர்ச்சியால் கூச்சலிட்டனர் என்று கூறப்படுகிறது. பலத்த காயங்களுடன் உயிருக்குப் போராடிய அவருக்குத் தேவாலயத்தின் உள்ளே வைத்து அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. டேவிற் அமெஸின் சொந்தத் தேர்தல் தொகுதி பிரிட்டனின் தென் கிழக்குப் பகுதியான சவுத்எண்ட் ( Southend) ஆகும். ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் தனது தொகுதியில் அவர் ஆதரவாளர்களைச் சந்திப்பது வழக்கம். அதற்காக அங்கு வருகை தந்திருந்த சமயத்திலேயே படுகொலை செய்யப்பட்டார்.

பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புக் கட்டளைப் பிரிவினர் கொலை தொடர்பான முன்னெடுத்த விசாரணைகளில், இந்தக் கொலை இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதல் என்று தெரிய வந்துள்ளது.

மூத்த அரசியல்வாதியின் படுகொலை பிரிட்டிஷ் பாராளுமன்ற சமூகத்தினரையும் நாட்டு மக்களையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது."அனைவரின் இதயங்களும் அதிர்ச்சியாலும் துயரினாலும் நிறைந்து போயுள்ளன" என்று பிரதமர்ஷ பொறிஸ் ஜோன்சன் கூறியிருக்கிறார்.

ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட மிகமோசமான ஒரு தாக்குதல் இது என்று அரசியல் பிரமுகர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.டேவிற் அமெஸின் மக்கள் சேவைகளையும், விலங்குகளது உரிமைகளுக்காக விடாது ஒலித்துவந்த அவரது குரலையும் அஞ்சலி செய்திகளில் பலரும் நினைவுகூர்ந்துள்ளனர். 69 வயதான டேவிற் அமெஸ் ஐந்து பிள்ளைகளின் தந்தை யாவார். 1983 இல் முதல் முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகியது முதல் பிரபலமான ஓர் அரசியல்வாதியாக விளங்கிய அவர் ஐரோப்பிய ஒன்றியக் கொள்கைகளுக்கு எதிரான நிலைப்பாடுடையவர் ஆவார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கொல்லப்படுகின்ற இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் டேவிற். தொழில் கட்சி எம். பி. ஆகிய Jo Cox 2016 இல் அவரின் தொகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருந்தார். டேவிற் அமெஸின் கொலையை அடுத்து நாடு முழுவதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை மீளாய்வு செய்து அதிகரிக்குமாறு உள்துறை அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

---

# உருளும் பந்து

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

கையைப் பிடித்து, "ஏனம்மா இந்தப் பெரியம்மாவோட இருக்காமல் அனாதைபோல் தனிய இருந்தனீ?" என வினாவ, "நான் தனிய இருந்ததால தான், நீங்கள் படிச்சு நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறீங்கள். உங்கட அப்பா எங்களை தவிக்க விட்டதாக மனம் வேதனைப் படக்கூடாது. அவரது எண்ணத் தோடு உங்களை வளர்த்துப் போட்டன். இங்க இருந்திருந்தால் உங்கட வாழ்க்கை திசை மாறிப் போயிருக்கலாம்" எனக் கூறி ஒருவித கர்வத்தோட என்னை பார்த்தார். அவரது பார்வையில் இருந்த பெருமிதம் எனக்கு ஒரு தெய்வத்தை பார்க்கும் உணர்வைத் தந்தது. அவாவின் கைகளை மேலும் இறுக்கிக் கொண்டேன். எனது மனதில் அண்மையில் அறிந்த செய்தி ஒன்று நிழலாடியது..

"மகளுக்கு ஏற்பட்ட இதயநோயின் போது. வைத்தியர்கள் சத்திர சிகிச்சை செய்தாலும் முப்பது சத விகிதம் தான் உயிர் தப்புவதற்கு வாய்ப்பு இருப்பதாகக கூறினார்கள். அப்போது அந்தத்தாய் தகப்பன் பிள்ளை மேல் கொண்டபாசத்தால் அந்தச் சத்திரசிகிச்சைக்கு ஒப்புக்கொண்டனர். சிறுமி வைத்தியசாலை யில் அனு மதிக்கப்பட்டாள். அந்தத் தாய் மகளுக்கு "அம்மா உனது இதயத்தில இறைவன் உறைகின்றான் அவன் உனக்கு உதவியாக இருப்பான், நீ பயப்படாதை" எனத் தினம் தினம் கூறி மகளின் மனதில் பயத்தை விரட்டி, நம்பிக்கை ஒளியைச் சுடர் விட்டு எரியவைத்தாள். அவளுக்கான நாளும் வந்தது. வைத்தியர்கள் தமது சீருடையில் சத்திர சிகிச்சை செயவதற்கு ஆயத்தமாகி னர் .அப்போது சிறுமி, "உ.ங்களிடம் கேள்வி கேட்கலாமா?" என தலைமை வைத்தியரிடம் வினாவ, அவரும் "என்ன?" எனக்கேட்டார் சிறுமி துணிச்சலாக "எனது இதயத்தை வெட்டியா சிகிச்சை செய்யப் போறீங்க?" என வினவ, பிள்ளை பயப்படுவதாக நினைத்து ,"உமக்கு வேதனை ஒன்றும் தெரியாமல்தான் நாங்கள் செய்வோம்" என வேதனை கலந்த குரலில் பதிலளித்தார். அதற்கு, "எனக்கு அதைப்பற்றிக் கவலை யில்லை, ஆனால், என் இதயத்தில இறைவன் இருப்பதாக அம்மா தினம் தினம் சொல்லுவா, அதால அவருக்கு காயம் ஏற்படாமல் வெட்ட வேணும் அத்தோட அவர் எப்படி இருக்கிறார் என்பதையும் நீங்கள் எனக்கு சொல்ல வேண்டும்" என ஒருவித ஆர்வத்துடன் கூறினாள். அதற்கு அந்த வைத்தியரும் தலையசைத்து மெல்லிய புன்முறுவல் பூத்தார். அவரது முகத்தில் கவலை ரேகைகள் ஓடின.

சத்திரசிகிச்சை தொடங்கியது. மூன்று மணித்தியாலங்களில் இதயத்திற்கு வாற இரத்த ஓட்டம் நின்று விட்டது. கலங்காத வைத்தியர் கலக்கம் அடைந்தார். எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு திரும்பினார் "நான் கடவுளை நம்புறவன் இல்லை. ஆனால், அந்தத் தாயின் நம்பிக்கை, இந்தப் பிள்ளையின் மனதில் இருந்த திடமான நம்பிக்கைக்காவது இறைவன் கருணை புரிந்திருக்கலாந் தானே", எனநினைத்து வேதனையோடு தனது கண்ணாடியைக் களற்றி கண்ணீரைத் துடைத்தார் அவரது உள்ளம் கொதித்தது. அந்த நேரம் தாதி ஒருவர் அவரது தோளில் தட்டி "டொக்டர் டொக்டர், இரத்தோட்டம் சரியாகி விட்டது" எனச் சந்தோசமாகக் கூற வைத்தியர் திரும்பினார். பிள்ளை யின் இதயம் வேலை செய்யத் தொடங்கியது.. வைத்தியரும் மகிழச்சியோடு தனது கடமையினை நிறை வேற்றினார்.

சிறுமி வீட்டுக்குச்செல்லும் நாள் அன்று.. வைத்தியர் திரும்பவும் அந்தச் சிறுமியிடம் சென்றார். சிறுமி அவ ரைக் கண்டதும் அவருக்கு நன்றி கூறியதோடு அவரைப் பார்த்து "என் இதயத்தில் இறைவனைப் பார்த்தீங்களா?, அவர் எப்படி இருக்கிறார்" என ஆவலோடு வினாவ, அந்த வைத்தியர், சிறுமியை விலகச் சொல்லி ஓரிடத்தை தனது கைளினால் சுட்டிக் காட்டினார். சிறுமி திரும்பிப் பார்த்தாள் அங்கு அவளது தாயார் நின்றார், உடனே சிறுமி தாயைக் கட்டிப்பிடித்து முத்தமழை பொழிந்தாள். "இறைவன் உங்களைப் போல இருந்தாராமே" எனக் கூறிச் சந்தோசப்பட்டாள்.

அந்தநேரத்தில. நானும் அம்மாவை ஒரு தெய்வமாகப் பார்த்தேன்..எனது எண்ணத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தாற் போல மகள் ஓடி வந்து மார்பில் விழ அவளைத் தூக்கி, படமாகிப் போன என் தெயவத்தை மனசார வணங்கி பெருமித மடைந்தேன். ■

---

# விடுதலைப் புலிகளின்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

கருத்து முரண்பட்ட சிலவற்றைப் பார்த்தால், போக்குவரத்தில் அதற்கான 'பாஸ்' முறையில் ஏற்படும் சொல்லொணா கஷ்டங்கள், அன்றாட சீவனத்துக்கு தேவைப்படும் அதிக அளவு பணம், சமயங்களில் அரிசிக்கு ஏற்படும் தட்டுப்பாடு, சினிமாவோடு பல பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கான தடை, வர்த்தகர்களிடம் அறவிடப்படும் பணம் போன்றவை அவை.

வாழ்க்கைத் தேவைகளைச் சமாளிப்பதற்கான பணத்துக்கு மக்கள் கஷ்டப்படவே செய்கிறார்கள். முன்னரெல்லாம் மற்றையவர்களுக்கு வேண்டிய வேளைகளில் கடனாக உதவியவர்கள், இப்பொழுது தாமே கடன் வாங்கும் நிலையில், சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக எழுத்தாளரும், சிவில் நிர்வாக உயர் உத்தியோகத்தருமான 'செங்கை ஆழியான்' தெரிவித்தார். உயர் மத்தியதர வர்க்கமாக இருந்தவர்கள் இப்பொழுது கீழ் மத்திய தரத்துக்கு வந்துவிட்டார்கள். இந்த நிலையில் உண்மையில், வெளிநாடுகளிலிருந்து செல்லும் பணம்தான் பெருமளவில் அங்கு ஈடுகொடுக்கிறது. கொழும்புக்கு இந்த சிரமங்களுடனான பயணத்தை மேற்கொள்ப வர்களில் பெருமளவினர் இந்த வெளிநாட்டுப் பணத்துக்காக வருபவர்களே. பணத்தோடு, பொருள்களையும் சுமந்துகொண்டு இவர்கள் திரும்புகிறார்கள்.

இந்திய படங்கள், பாடல்களோடு 'இந்தியா ருடே', 'புறொன்ற் லைன்', கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் உள்ளிட்ட பெரும்பாலான இந்திய சஞ்சிகைகள், ஏரிக்கரை நிறுவன பத்திரிகைகள் உள்ளிட்ட கொழும்பு பத்திரிகைகள் போன்றவற்றின் விற்பனை அங்கு தடை செய்யப்பட்டிருக்கின்றது.

ஆக, இவற்றுக்கெல்லாம் புலிகள் தரப்பிலும் நியாயமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. உளவாளிகள் தொடர்பில், பிரயாணஞ்செய்பவர்கள் மீதான கண்காணிப்பு அவர்களுக்கு அவசியமாகிறது. இதற்காகவே, பயணஞ்செய்யவிருக்கும் ஒருவருக்கு அவர் விண்ணப்பித்து மூன்று தினங்களுக்குப் பின்னர் தான் அவர் பயணஞ்செய்வதற்கான 'பாஸ்' அவருக்கு வழங்கப்படுகிறது. இந்த கால இடைவெளி, அவர் பற்றிய விபரங்களை அறிய தேவைப்படுகிறது. இது வழக்கமான நிலைமை என்றாலும், சில அத்தியாவசிய சந்தர்ப்பங்களில், வழக்கமாக 'பாஸ்' வழங்கப்படாத தினங்களில்கூட அலுவலகத்தைத் திறந்து, வேண்டியவர்களுக்கு 'பாஸ்' வழங்குவதாக புலிகளின் 'கலை, பண்பாட்டு துறை' பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கூறுகிறார். பாஸ் கட்டணமாக அறவிடப்படும் 100 ரூபாயை மக்கள் பெரிதாக எண்ணவில்லை என்கிறார் அவர். மிக இன்னலான காலகட்டத்திலும் மக்களின் இந்த பயணத்துக்காக புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், உயிர்த் தியாகங்களையும் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். பூநகரி முகாமில் இராணுவ கெடுபிடிகள் மிகுந்திருந்த காலத்தில் அந்த முகாமைநோக்கி தாக்குதலை மேற்கொண்டு, இராணுவத்தினரை அத் தாக்குதலில் ஈடுபட வைத்து, அதில் அவர்களின் கவனத்தைத் திருப்பி, அவ்வேளையில் பொது மக்கள் தம் பயணத்தைப் பாதுகாப்பாக தொடரவைத்ததை அவர் கூறினார். இவ்விதமாக, கிளாலி கடலில் இப் பிரயாணிகள் பாதுகாப்புக்காக மட்டும் 300 போராளிகள் வீர மரணம் அடைந்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

(அடுத்த வாரம்)

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I


நேரம் : 45 நிமிடம்

1- 40 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக


தொடக்கத்தில் உள்ள உருவிற்குப் பொருத்தமான உருவினை தெரிவு செய்க


01.
1 2 3


02.
1 2 3


03.
1 2 3


ஆரம்பத்தில் தரப்பட்ட மூன்று படங்களுடன் பொருந்துகின்ற படத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


04.
1 2 3


05.
1 2 3


06.
1 2 3


07.
1 2 3


உருக்களில் உள்ள இலக்கங்களை அவதானித்து விடை எழுதுக.




08. வட்டத்திற்கு மாத்திரம் உரிய இலக்கம் எது?

1. 6 2. 2 3. 4

09. செவ்வகம், முக்கோணி ஆகிய இரண்டுக்கும் மாத்திரம் உரிய இலக்கம் எது?

1. 2 2. 6 3. 5

# தீபாவளி முற்பணமாக ரூ.15,000 வழங்குங்கள்

## வடிவேல் சுரேஷ் கோரிக்கை

பதுளை, ஒக். 17

"தீபாவளி பண்டிகை முன்னிட்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு முற்பணமாக 15 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்குப் பெருந்தோட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொலைநகல் மூலமாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

"பொருட்களின் விலையேற்றம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலைநாட்கள் குறைப்பு, முறையான சம்பளம்



இன்மை ஆகியவற்றால் அசௌகரியமான சூழ்நிலையிலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்வாதார ரத்தை நடத்திச் செல்கின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் மனிதாபிமான ரீதியில் பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடந்து கொள்ள வேண்டும். ஆகவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்தம் அறவிடும் ரீதியில் ரூபாய் 15 ஆயிரத்தை தீபாவளி முற்பணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" - என்றார். (இ)

# ரத்ன தேரர் நீக்கம்!

## எம்.பி. பதவியைப் பறிக்கவும் வியூகம்

கொழும்பு, ஒக். 17

**எமது மக்கள் சக்தி (கொடி சின்னம்) கட்சியிலிருந்து தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரை அக்கட்சி நீக்கியுள்ளது.**

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயல்பட்டமை, கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் வாய்ப்புக்கு தன்னிச்சையான முறையில் தனது பெயரைப் பரிந்துரைத்துக் கொண்டமை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டே அவர் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து அத்துரலிய ரத்ன தேரரை நீக்கிவிட்டு, கலபொட அத்தே



ஞானசார தேரரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் தனித்துக் களமிறங்கிய எமது மக்கள் சக்திக்கு தேசியப்பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் கிடைக்கப்பெற்றது. (இ)

# சு.கவை பலப்படுத்த நடவடிக்கை; புதிய அமைப்பாளர்களும் நியமனம்

## கட்சியின் பொது செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமனம் இடம் பெறும்."

- இவ்வாறு அக்கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்



மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சில பகுதிகளில் கூட்டாகவும், சில மாவட்டங்களில் தனித்து களமிறங்குவதற்கும் சுதந்திரக் கட்சி உத்தேசித்துள்ளது. (இ)

*மாகாண சபை தேர்தலில்*

# முக்கிய புள்ளிகளை களமிறக்கும் எதிரணி

கொழும்பு, ஒக். 17

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பதவி விலகுவதற்கு திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பில் கட்சித் தலைமைப்பீடத்துக்கு அவர்கள் தெரிவுபடுத்தியுள்ளனர். மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கும் நோக்கிலேயே இவர்கள் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வடமேல் மாகாணத்திலும், மயந்த திஸாநாயக்க மத்திய மாகாணத்திலும், சமிந்த விஜேசிறி ஊவா மாகாணத்திலும் களமிறங்குவதற்குத் தயாராகி வருகின்றனர்.

சப்ரகமுவ, வடமத்திய, மேல் மற்றும் தென்மாகாணங்களில் எம்.பிக்கள் சிலரே பிரதான வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (இ)

# ஒரு கோடியே 40 இலட்சம் பைசர் அடுத்த மாதம் இலங்கைக்கு

கொழும்பு, ஒக். 17

கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் செயல்திட்டத்தின் கீழ் மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற் காக ஒரு கோடியே 40 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் அடுத்த மாதம் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன என்று மருந்துப் பொருட் கள் உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்



தொடர்பான இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் குறித்த உற்பத்தி நிறுவனத்துக்கு அது தொடர்பில் ஓடர்களையும் சமர்ப்பித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது இரண்டு தடுப் பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ள வர்களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் விசேட நிபுணர் குழு பரிந்துரை செய் துள்ள நிலையில் மேற்படி கொள்வனவு செய்யப்படவுள்ள தடுப்பூசிகள் பூஸ்டர் தடுப்பூசியாக வழங்கப்படவுள் ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# வட்டவளை விபத்தில் இளைஞன் மரணம்!

வட்டவளை, ஒக். 17

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோலினா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய எந்தனி டொமினிக் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியில் வழுக்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வட்டவளை வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து சம்பவம் தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்!

## முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் தலவாக்கலையில் நேற்று போராட்டம்

தலவாக்கலை, ஒக். 17

பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை நகரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் செயல்பாட்டாளர்களும், மக்களும் பங்கேற்றனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடன் குறைக்குமாறும், வரவு - செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறும் இதன்போது வலியுறுத்தப்பட்டன.



அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படவில்லை. தொழில் சுமையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டித்தும், ஆயிரம் ரூபாயை வழங்குமாறும் இதன்போது போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (இ)

## இரு...

கிறேன்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம் .ஏ. சுமந்திரன் நேற்று தெரிவித்தார்.

நேற்று அவர் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

“இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோரி இன்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக நடைபெறவுள்ள எதிர்ப்புப் பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு நல்க வேண்டும்,

இதேவேளை, நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள உரம் மற்றும் கிருமிநாசினி பற்றாக்குறை விவசாயிகளையும் தோட்டத் தொழிலையும் மிக மோசமாகப் பாதித்திருக்கின்றது. வடக்கிலும் கிழக்கிலும் பெரும்போக நெற் பயிர்ச்செய்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. ஓரிரு வாரங்களுக்குள் பசளை மற்றும் கிருமி நாசினி அத்தியாவசியமாக தேவைப்படும். இந்தத் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்யுமாறு கோரி வடக்கு, கிழக்கிலுள்ள சகல கமநல சேவைகள் மையங்களுக்கூடாக நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

கொரோனா தொற்று காரணமாக சிறிய எண்ணிக்கையானவர்கள், சமூக இடைவெளிகளைப் பேணி இந்தப் போராட்டங்களில் ஈடுபடுவார்கள். பல இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்” - என்றுள்ளது. (ஐ -02-03)

## போராட்டங்களுக்கு...

டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் அழைப்பின்பேரில் நடக்கும் போராட்டம் தொடர்பில் ஈழநாடு மாவை சேனாதிராசாவை தொடர்பு கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்தப் போராட்டங்கள் தொடர்பில் வெள்ளிக்கிழமை மாலைதான் அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கு முன்னர் எமக்கு ஏற்பாட்டாளர்களிடம் இருந்து எந்தத் தகவலும் தரப்படவில்லை. இந்நிலையில், அன்றிரவு சூம் செயலியில் தமிழ் அரசுக் கட்சியினர் கலந்துரையாடினோம். இந்தப் போராட்டங்கள் தேவையானவை. மீனவர்கள், விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து நடக்கும் இந்தப் போராட்டத்துக்கு நாங்கள் முழு ஆதரவு. அவர்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்.

அத்துடன், உடல்நலக் குறைவால் முல்லைத்தீவிலிருந்து ஆரம்பமாகும் போராட்டத்தில் நான் பங்கேற்கவில்லை. எனினும், பருத்தித்துறை துறைமுகத்துக்கு சென்று போராட்டத்தில் பங்கேற்க முயற்சிப்பேன் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## மீனவர்களுக்கு...

லுள்ள மீனவர் கிராமங்களிலிருந்து படகுகளில் மீனவர்களும் ஆதரவாளர்களும் பங்கேற்பர். பருத்தித்துறை துறைமுகத்துக்கு அப்பால் இருக்கும் சுப்பர்மடம், பொலிகண்டி மீனவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பருத்தித்துறை கற்கோவளம் இறங்குதுறைக்கு சென்று அங்கிருந்து பேரணியில் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம். ஏ. சுமந்திரன் எம். பியின் அழைப்பின் பேரில் இடம்பெறும் இந்தப் போராட்டத்துக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி, முல்லைத்தீவு, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு கடற் றொழிலாளர் சம்மேளனங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்தப் போரட்டத்தில் முல்லைத்தீவிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், இரா. சாணக்கியன், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான து. ரவிகரன், ச. சுகிர்தன், கே. சயந்தன் ஆகியோர் பங்கேற்பர் என்று தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா பருத்தித்துறை துறைமுகத்திற்கு சென்று போராட்டக்காரர்களுடன் இணைவார் என்று தெரிவித்த அவர், எனினும், உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதால் சிலவேளைகளிலேயே போராட்டத்தில் பங்கேற்பார் என்று அவர் எமக்குக் கூறினார். (ஐ-02)

## புலம்பெயர்...

ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திற்காக நியூயோர்க்கிற்கு ஜனாதிபதி சென்றிருந்தபோது, இனப் பிரச்னை தீர்வுக்கு உள்ளக பொறிமுறையில் தீர்க்கப்பட வேண்டும். இது தொடர்பான பேச்சுக்களில் புலம்பெயர் தமிழர்களையும் இணைத்துக் கொள்வோம் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கிய அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்,

“உலகத் தமிழர் பேரவை போன்ற தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளுடன் அரசாங்கம் நேரடியாகப் பேசாது ”, என்று கூறினார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களான உலகத் தமிழர் பேரவை, பிரிட்டிஷ் தமிழர் பேரவை, கனடிய தமிழ் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனடிய தமிழ் தேசிய சபை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலகத் தமிழ் ஒருங்கிணைப்புக் குழு என்பவற்றை கடந்த ஏப்ரல் மாதம் அரசாங்கம் தடை செய்திருந்தது.

இந்நிலையில், “அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் நாங்கள் பேச முடியாது. இது சாத்தியமில்லை. ஏனென்றால், அது எங்கள் சட்டத்தை மீறுவதாகும். ஆனால், மற்ற தரப்புக்கள் உள்ளன. எனவே, அவர்களுடன் பேசுவது பயனுள்ளது” என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

மேலும், நல்லிணக்க செயல்முறையின் ஒரு பகுதியாக அரசாங்கம் பல குழுக்கள் மற்றும் நபர்களுடன் கலந்துரையாடி வருகிறது. பிரிட்டிஷ் பிரதமரின் அழைப்பின் பேரில் COP26 கலந்துரையாடலில் பங்கேற்க செல்லும் ஜனாதிபதி கோட்டாபய, நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்திப்பார் - என்றார்.

எனவே, “அரச சார்பற்ற சமூகமாக இருந்தாலும் அல்லது புலம்பெயர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது இலங்கையில் உள்ள பாராளுமன்ற அமைப்பாக இருந்தாலும் சரி. அவர்கள் அனைவருடனும் நாங்கள் பேச்சில் ஈடுபட விரும்புகிறோம், அதுதான் முன்னோக்கி செல்லும் வழி”, என்றும் அமைச்சர் இதன்போது கூறியிருந்தார். (ஐ)

## “நாட்டில்...

முடியாதளவு ஆபத்துக்களை அவை ஏற்படுத்தும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாடு இப்போது சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது, துறைமுகங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன. இதனால், நாட்டில் எப்போது வேண்டுமானாலும் புதிய திரிபுகள் பரவலாம். அவை கணிக்க முடியாததாக ஆபத்துக்களை ஏற்படுத்தும்.

முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட போதிலும் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுவது அவசியம்.

தற்போதைய நிலவரப்படி, மொத்த மக்கள் தொகையில் சுமார் 67 சதவிகிதம் பேர் கோவிட் - 19 தடுப்பூசியின் ஒரு டோஸைப் பெற்றுள்ளனர். அதே நேரத்தில் 58 சதவிகிதம் பேருக்கு இரண்டு டோஸ்களும் வழங்கப்பட்டுள்ளன.

நாம் திருப்திகரமான நிலையை அடைய வேண்டுமானால், மொத்த மக்கள் தொகையில் 70 முதல் 80 சதவிகிதம் பேர் வரை தடுப்பூசி போடுவது முக்கியம் என்றார். (ஐ)

# மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும்!

### அரசிடம் சுதந்திர கட்சி வலியுறுத்து



கொழும்பு, ஒக். 17

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபை தேர்தலில் தனித்து போட்டியிடுவோமா அல்லது கூட்டணியாக போட்டியிடுவோமா என்பதை எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எம். பி. கூறியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் செயல்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவது மற்றும் வெற்றிபெறும் திட்டங்களை செயல்டுத்துவது குறித்து கட்சியின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியுள்ளோம். மாகாண சபை தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னர் சுதந்திர கட்சியை பலப்படுத்துவது பிரதானம்.

மாகாண சபை தேர்தலில் தனித்து போட்டியிடுவோமா அல்லது கூட்டணியில் போட்டியிடுவோமா என்பதை எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம். கட்சியின் உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு அமைய தீர்மானம் எடுக்கப்படும்.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதே தவிர, குறைவடைவில்லை. மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்கள் மத்தியில் ஏழ்மை உருவாகியுள்ளது. தோன்றியுள்ள இப்பிரச்னைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண முடியாது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் நீண்டகால திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய திட்டம் வகுக்கப்பட வேண்டும். அரசாங்கம் மாறும் போது அபிவிருத்தி கொள்கைகள் மாற்றமடைந்தால் நாட்டை முன்னேற்ற முடியாது. இதுவரையில் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

தேசிய கொள்கை திட்டத்தின் ஊடாகவே நாட்டை முன்னேற்ற முடியும். என்பதில் சுதந்திர கட்சி உறுதியாகவுள்ளது -என்றார். (ஐ)

# நாட்டு மக்களை நடுவீதிக்கு கொண்டுவந்துவிட்டது அரசு

### மனோ எம்.பி. கடும் சீற்றம்

நுவரெலியா, ஒக். 17

ராஜபக்ஷ அரசு நாட்டு மக்களை நடுவீதிக்குக் கொண்டுவந்துவிட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

பொருட்களின் விலை உயர்வுக்கு எதிராக தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவதுல்: -

“தோட்டத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மீனவர்கள், விவசாயிகள் என அனைவரையும் ராஜபக்ஷ அரசு நடுவீதிக்கு கொண்டுவந்துவிட்டது. ஏற்கனவே பொருளாதார பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களே தற்போதைய விலை உயர்விலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக எவரும் குரல் எழுப்புவதில்லை. தமிழ் முற்போக்கு கூட்டணியே குரல் எழுப்புகின்றது.

இந்த அரசால் முடியாது. முடியாதவர்கள் வீட்டுக்குச் செல்வதே நல்லது” - என்றார். (இ)

## காங்கேசன்துறை...

பரப்பை சுத்தம் செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக 185 ஏக்கர் பரப்பில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

எனினும், இராணுவத்தை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை கட்டப்படும்போது அவர்கள் வெளியேறுவார்கள்.

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து பி. எல். சி. ஆகிய இரண்டுக்கும் சொந்தமான இந்த வளாகங்கள் இராணுவத்தின் ஆதரவுடன் சுத்தப்படுத்தப்படுகின்றன. அங்கிருந்து சேதமடைந்த கட்டடங்களை அகற்றுகிறோம். நல்ல இயந்திரங்களை உபயோகப்படுத்தவும், பயன்படுத்த முடியாதவற்றை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிமெந்து தொழிற்சாலையைப் பொறுத்தவரை அதனை மீள ஆரம்பிக்க சர்வதேச முதலீட்டாளரை அழைக்கலாம். அல்லது உள்ளூர் முதலீட்டாளர்கள் இணைக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

1950களில் நிறுவப்பட்ட காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை நாட்டுக்கு குறிப்பிடத்தக்க வருமானத்தை ஈட்டித் தந்தது. இந்த வருவாய் மூலம் இரு தொழிற்சாலைகளை அப்போதைய அரசாங்கத்தால் ஆரம்பிக்க முடிந்தது. எனினும் உள்நாட்டு போரை தொடர்ந்து தொழிற்சாலை வீழ்ச்சியை சந்தித்தது. 1990இல் தொழிற்சாலையை இராணுவம் ஆக்கிரமித்தது. இதைத் தொடர்ந்து அங்கிருந்த பல இயந்திரங்கள் திருடப்பட்டன அல்லது விற்கப்பட்டன என்றும் அவர் மேலும் கூறியிருந்தார். (ஐ)

## கொரோனாவுக்கு...

6 பெண்களும் அடங்குவர். இவர்களில், 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்ட 5 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 18 பேரும் உயிரிழந்தனர்.

இதனால், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13,472 ஆக உயர்வடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 649 தொற்றாளர்...

இலட்சத்து 31 ஆயிரத்து 70 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும் 347 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 92 ஆயிரத்து 305 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். (இ)





# வவுனியாவில் மீண்டும் கொரோனா தாண்டவம்

## 32 பேருக்குத் தொற்று; மூவர் பரிதாப மரணம்

வவுனியா, ஒக். 18

**வவுனியாவில் மேலும் 32 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 24 வயது யுவதி உட்பட மூவர் மரணமடைந்தனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று காலை வெளியாகின.

அதில் வவுனியா மாவட்டத்தின் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 32 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக எந்த வித தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாத நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் ஒருவரும், சாஸ்திரி கூழாங்குளம் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரும், உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஆண் ஒருவரும் என மூவர் மரணமடைந்தனர்.

மரணித்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ)

### இரு பெண்களுக்கிடையிலான

# மோதலை தடுக்க சென்றவர் கத்தி குத்தில் பரிதாப மரணம்

தனிப்பட்ட மோதலொன்றைத் தடுக்கச் சென்ற 37 வய தான நபர் ஒருவர் கத்திக்குத் தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் மாவட்டம், மெதிரிகிரிய - பெரகும்புர பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

தனது வாகனப் பழுது பார்ப்பு நிலையத்தில் பணி நிறைவடைந்து வீடு செல்லும் போது, இரு பெண்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த மோதலைத் தடுப்பதற்காகக் குறித்த நபர் முயற்சித்துள்ளார்.

அதன்போதே அவர் மீது பெண்ணொருவரால் கத்திக் குத்து தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது எனவும், அதன் பின்னர் அங்கிருந்த மற்றொரு பெண்ணால் அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந் துள்ளார் என வும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த நபரின் மனைவி, கடந்த 7 நாட்களுக்கு முன்னரே குழந்தையொன்றைப் பிரசவித் துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில், கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தினார் எனக் கூறப்படும் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளளார். (இ)

# வடக்கு மாகாண புதிய ஆளுநர் ஜீவன் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் வழிபாடு

மன்னார், ஒக். 17

மன்னார் மாவட்டத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வடக்கு மாகாண புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா, திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளிலும் கலந்துகொண்டார்.

கடந்த வாரம் ஜனாதிபதியால் வடக்கு மாகாண ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டதை அடுத்து கொழும்பிலுள்ள வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் தனது கடமையை அவர் ஆரம்பித்தார்.

இந்நிலையில், அவர் நேற்று மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்ட அவர், திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக்கேணியில் குடத்தில் நீரெடுத்து சிவலிங்கப் பெருமானுக்கு நீர் ஊற்றி வழிபாடு மேற்கொண்டார். (இ - 03)



# மரண அறிவித்தல்

## திருமதி தனேந்திரன் நீலாதேவி



**மலர்வு 14.04.1957**

**உதிர்வு 14.10.2021**

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொட்டடி சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தனேந்திரன் நீலாதேவி கடந்த (14.10.2021) வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை – கண்மணியின் மகளும் நாகலிங்கம் – அன்னலட்சுமியின் பாசமிகு மருமகளும் தனேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் கமலாதேவி, விஜயலட்சுமி, புஸ்பராணி, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் உதயராணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற குணரட்னம் மற்றும் பத்மநாதன், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் லாவன்யா, துரிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரமேஸ் (கனடா), பிரபாகரன் ஆகியோரின் மாமியாரும் கௌசி, ஹிசாந், அதிஷ்ரா (ஏஞ்சல் பாடசாலை), டினுஜன், ஹரிஸ், ஜஸ்வின், மித்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (18.10.2021) திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2.00 மணிக்கு வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: நா.தனேந்திரன் (கணவர்)**
**Mobile : +94776146253**

**யாழ்.மாவட்ட தேசோதயத்தின் தலைவர், யாழ்.மாநகர சபை உறுப்பினர், யாழ். பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்தி சமாசத் தலைவர், பூமணியம்மா அறக் கட்டளையின் யாழ். மாவட்ட தலைவர், யாழ்ப்பாண நுழைவாயில் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர், கொக்குவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், ஐக்கிய மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அமைப்பின் யாழ். மாவட்ட தலைவர் (URI), யாழ்ப்பாணம் J/83 பிரிவின் பொலிஸ், சிவில் கொமிற்றி தலைவர், யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார பேரவை உறுப்பினர், வில்லூன்றி இந்து மயான பரிபாலசபைத் தலைவர்.**









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்- சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள் தலைவர் இந்து குருமார் அமைப்பு
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-படையப்பா
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்-நடிகை திலீபா ராஜா



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT –யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்-நெருக்கடி நிலையும் இளைஞர்களும்



10.00 மணி:- நேர்கொண்ட பார்வை

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சக்தி ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு